بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ  نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ  وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 9 | இதழ் 36

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian Tamil

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரீ கமரீ 1445 - ரபீயுல் அவ்வல் 01 ★ ஹிஜ்ரீ ஷம்ஸி 1403 - தபூக் 05 ★ 2024 ஆகஸ்ட் 29


## அல்லாஹ்வின் கட்டளை

وَاُدۡخِلَ الَّذِیۡنَ اٰمَنُوۡا وَعَمِلُوا الصّٰلِحٰتِ
جَنّٰتٍ تَجۡرِیۡ مِنۡ تَحۡتِہَا الۡاَنۡہٰرُ خٰلِدِیۡنَ
فِیۡہَا بِاِذۡنِ رَبِّہِمۡ ؕ تَحِیَّتُہُمۡ فِیۡہَا سَلٰمٌ ○

**பொருள்**

நம்பிக்கை கொண்டு நற்செயல்களைச் செய்பவர்கள், தம் இறைவனின் கட்டளையினால் தோட்டங்களில் நுழையுமாறு செய்யப்படுவர்; அவற்றில் ஆறுகள் ஓடும். அவர்கள் அவற்றில் என்றென்றும் வாழ்ந்து வருவர். அங்கு அவர்களின் வாழ்த்து சாந்தி உண்டாவதாக என்பதேயாகும். (இப்ராஹீம்:24)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## மார்க்கத்திற்காக வேதனை கொள்வது ஒரு மகத்தான விஷயமாகும். அது மரணத்தின் தருவாயில் ஏற்படும் துன்பத்தின்போது பயனளிக்கின்றது

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

ஸுஹருக்குப் பிறகு அஸர் நேரம் வரை தான் உயிருடன் இருப்பேன் என்று யாருக்கு தெரியும்! சிலமுறை இவ்வாறு நிகழ்கின்றது. அதாவது திடீரென இரத்த ஓட்டம் தடைபட்டு (உடலிலிருந்து) உயிர் வெளியேறி விடுகின்றது. சிலமுறை நல்ல ஆரோக்கியமான நபர் கூட திடீரென மரணித்து விடுகின்றார். வஸீர் முஹம்மது ஹஸன் ஸாஹிப் வெளியில் நடைபயிற்சிக்கு சென்று விட்டு வீட்டிற்கு வந்திருந்தார். மேலும் மிகவும் மகிழ்ச்சியாக படியில் ஏறிக் கொண்டிருந்தார்கள். ஒன்றிரண்டு படியே ஏறியிருப்பார்; அதற்குள் அவருக்கு தலைசுற்றல் ஏற்பட்டு கீழே அமர்ந்து விட்டார். நான் உதவி செய்யட்டுமா? என்று வேலைக்காரர் கேட்டார். வேண்டாம் என்று அவர் கூறினார். பின்னர் இரண்டு, மூன்று படிகளே ஏறினார். மீண்டும் தலை சுற்றல் ஏற்பட்டது. அதே தலைசுற்றலுடன் அவர் மரணித்து விட்டார். அதேபோன்று குலாம் முஹைய்யித்தீன் கோத்லீ காஷ்மீர் உறுப்பினர் திடீரென மரணித்து விட்டார்.

சுருக்கமாக எந்த நேரத்தில் மரணம் வரும்? என்று நமக்கு தெரியாது. எனவே அதனைக் குறித்து கவலையுடையவராக இருப்பது அவசியமாகும். எனவே மார்க்கத்திற்காக கவலை கொள்வது ஒரு மகத்தான விஷயமாகும். அது மரணத்தருவாயில் ஏற்படும் துன்பத்தின் போது பயனளிக்கின்றது. திருக்குர்ஆனில்

اِنَّ زَلۡزَلَۃَ السَّاعَۃِ شَیۡءٌ عَظِیۡمٌ

என்று வந்துள்ளது. ஸாஅத் என்பதன் பொருள் கியாமத் என்பதும் ஆகும். அதனை நாம் மறுக்கவில்லை. ஆனால், இதில் மரணத்தருவாய் என்பதே பொருள் ஆகும். ஏனெனில் அது முழுமையான முறையில் தொடர்பை துண்டித்தலாக அமைகின்றது. மனிதன் தனது விருப்பமான மற்றும் நேசத்திற்குரிய அனைத்து விஷயங்களிலிருந்தும் திடீரென தனித்து விடுகின்றான். ஓர் விநோதமான பதற்றம் அவனைத் தொற்றிக் கொள்கின்றது. ஆக அவன் உள்ளுக்குள்ளேயே ஒரு சிறையில் இருக்கின்றான். எனவே மனிதன் மரணத்தை கவனத்தில் கொள்வதும், அவனது உலகியல் பொருட்களின் மீது கடைசி நேரத்தில், அதிலிருந்து பிரியும் தருவாயின்போது அவனது துன்பத்திற்கு காரணமாக அமையும் வகையில் நேசம் கொள்ளாமல் இருப்பதும் அவனது நற்பேறு ஆகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 2, பக்கம் 29, 2018-ம் ஆண்டு பதிப்பு)

## ஷிர்க் மனிதனை மிகவும் குறுகிய எண்ணம் கொண்டவனாக ஆக்கிவிடுகின்றது. மேலும் அவனது மனவலிமையை குன்றச் செய்து விடுகின்றது. அவனது நோக்கத்தை அற்பமானதாக ஆக்கிவிடுகின்றது

وَمَنۡ یُّشۡرِکۡ بِاللّٰہِ فَکَاَنَّمَا خَرَّ مِنَ
السَّمَآءِ فَتَخۡطَفُہُ الطَّیۡرُ اَوۡ تَہۡوِیۡ بِہِ الرِّیۡحُ فِیۡ
مَکَانٍ سَحِیۡقٍ (22:34)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஷிர்க்கின் எட்டாவது வகை : எட்டாவது வகை இதுவாகும். அதாவது எந்தப் பணியை செய்வதற்கு இறைவனின் இயற்கைச் சட்டம் எவர் ஒருவருக்கு ஆற்றல் வழங்கவில்லையோ அவரைக் குறித்து அவர் இன்ன பணியை செய்துவிடுவார் என்று எண்ணம் கொள்வதாகும். உதாரணமாக வல்ல இறைவன் திருக்குர்ஆனில் தன்னை அஸ்ஸமீஃ (நன்கு கேட்பவன்) என்று கூறியுள்ளான். அதன் பொருள் இதுவாகும். அதாவது அவன் முழுமையான முறையில் மக்களின் துஆக்களை கேட்கின்றான்; மேலும் அவர்களது தேவைகளை பூர்த்தி செய்கின்றான். அதாவது தொலைவு மற்றும் காலம் போன்ற விஷயங்கள் அவன் மீது எந்த தாக்கத்தையும் ஏற்படுத்துவதில்லை. தற்போது ஒருவர் இறைவனிடம் துஆ செய்வதற்கு பகரமாக மரணித்தவர்களின் கல்லறைகளுக்கு சென்று அவர்களிடம் தனது தேவையை வேண்டுகின்றார் என்றால் பின்னர் அவர் ஷிர்க் எனும் குற்றத்தை செய்கின்றார். ஏனெனில், அந்த நபர் அஸ்ஸமீஃ என்ற இறைவனின் பண்பில் மரணித்தவர்களையும் இணைத்துக் கொள்கின்றார். ஆனால், திருக்குர்ஆன் இதனை முற்றிலும் மறுக்கின்றது. மேலும் திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது: அவர்கள் அல்லாஹ்வையன்றி எவர்களை அழைக்கின்றனரோ அவர்களால் (பொய்க் கடவுளரால்) எதனையும் படைக்க முடியாது. மேலும் அவர்களே (இறைவனால்) படைக்கப்பட்டவர்கள்.

இதன் தொடர்ச்சி 9-ம் பக்கம்....

## நபிமொழி

### அல்லாஹ்வைப் புகழ்வதின் முக்கியத்துவம்

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: எல்லாம் வல்ல இறைவனை புகழாமல் தொடங்கப்படும் ஒவ்வொரு முக்கியத்துவம் வாய்ந்த பணியும் அருளற்றதாகவும், குறைபாடுடையதாகவும் அமைகின்றது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (இப்னு மாஜா, அப்வாபுன் நிக்காஹ், குத்பா நிக்காஹ்)

### முஸ்லிமின் சிறப்பு

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒரு நபருடைய இஸ்லாத்தின் சிறப்பு என்னவென்றால் அவருக்கு எந்த விஷயத்துடன் தொடர்பே இல்லையோ அதனை அவர் விட்டு விடவேண்டும் என்று இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (திர்மிதி: கிதாபுஸ்ஸுஹ்த், பாடம் 11, ஹதீஸ் 2317)

### உண்மையான நம்பிக்கையாளர்

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறையச்சமுடையவராக ஆகிவிட்டால் சிறந்த இறை வணக்கம் செய்பவராக ஆகிவிடுவீர்கள்; போதுமென்ற மனம் படைத்தவராக ஆகிவிட்டால் பின்னர் எல்லாரையும் விட அதிக நன்றி செலுத்தக் கூடியவராக ஆகிவிடுவீர்கள். உங்களுக்காக எதனை விரும்புகின்றீர்களோ அதனையே பிறருக்காக விரும்பினீர்கள் என்றால் பின்னர் உண்மையான நம்பிக்கையாளராக ஆகிவிடுவீர்கள். உங்களது அண்டை அயலாருடன் நல்ல முறையில் நீங்கள் நடந்தால் பின்னர் உண்மையான முஸ்லிமாக ஆகிவிடுவீர்கள். குறைவாக சிரியுங்கள். ஏனெனில் அதிகமாக சிரிப்பது உள்ளத்தை மரணிக்கச் செய்து விடுகின்றது.

(ஸுனன் இப்னு மாஜா, கிதாபுஸ் ஸுஹ்த்)

* * * * * * *

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**பிரிட்டன் ஆண்டு மாநாட்டின் சந்தர்ப்பத்தின் போது தூய உள்ளத்துடன் தொண்டாற்றிய ஊழியர்களுக்கு நன்றி செலுத்துதல் மற்றும் ஜல்ஸாவில் கலந்து கொண்ட ஜமாஅத் அல்லாத விருந்தினர்களுக்கு ஏற்பட்ட தாக்கங்கள்**

அல்லாஹ்வின் அருளால் எங்கு ஜல்ஸா நம்மவர்களின் தர்பிய்யத் மற்றும் ஆன்மிகத்தில் முன்னேற்றம் ஆகியவற்றிற்கான வழிமுறையாக ஆகியுள்ளதோ அங்கு அந்நியர்களுக்கும் இஸ்லாத்தின் போதனைகளை புரிவதற்கும் அவர்களை அல்லாஹ்விற்கு அருகில் கொண்டு வருவதற்கும் ஒரு வழிமுறையாக ஆகியுள்ளது. எனவே இதற்காக நாம் எங்கு அல்லாஹ்விற்கு முன்னால் மேலும் அதிகமாக குனிய வேண்டுமோ அங்கு அவனுக்கு நன்றியும் செலுத்த வேண்டும். மேலும் அதேசமயம் நாம் அல்லாஹ்வின் தூதுச் செய்தியை, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தூதுச் செய்தியை உலகில் எட்ட வைப்பதற்காக முன்னரை விட அதிகமாக முயற்சி செய்து கொண்டிருப்போம் என்ற இந்த வாக்குறுதியிலும் நிலைத்திருக்க வேண்டும்

நான் பணியாளர்களுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகின்றேன். அவர்கள் மாநாட்டிற்கு முன்பும், மாநாட்டின் போதும், மாநாட்டிற்குப் பிறகும் இந்த ஏற்பாடுகளை செய்து, அதன் இறுதிகட்ட பணிகளை மேற்கொள்வதில் தம் பங்களிப்பை வழங்கியுள்ளார்கள்; இப்பொழுதும் பணியாற்றி வருகின்றார்கள். அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத் பெண்களிடத்திலும், ஆண்களிடத்திலும், குழந்தைகளிடத்திலும் - இவர்கள் அனைவரிடத்திலும் இது எப்படிப்பட்ட தனிச்சிறப்பாக உள்ளது என்றால், அதை அந்நியர்களும் புகழ்கின்றார்கள். மேலும் இந்த பணியாளர்கள் தம்முடைய கடமைகளை நிறைவேற்றியவாறு தம் பணிகளை செய்து கொண்டிருக்கும் போது அவை மௌனமான தப்லீஃக்காக இருக்கின்றது.

## ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 02 ஆகஸ்ட் 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1403 ஆண்டு **ஸுஹுர்** மாதம் **02 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

அல்ஹம்துலில்லாஹ். கடந்த வாரம் யூ.கே ஆண்டு மாநாடு அல்லாஹ்வின் அருட்களின் காட்சிகளை காட்டியவாறு நிறைவடைந்தது. இந்த மூன்று நாட்கள் பெரும் அருட்களுக்குரிய நாட்களாக இருந்தன. அவை நம்மவர்கள் மீதும் அந்நியர்கள் மீதும் ஒரு நேர்மறையான தாக்கத்தை விட்டுச் சென்றது. அந்நியர்கள் சிலருடைய தாக்கங்களை பற்றி எடுத்துக் கூறுவேன். ஆனால், அதற்கு முன்பு நான் பணியாளர்களுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகின்றேன். அவர்கள் மாநாட்டிற்கு முன்பும், மாநாட்டின் போதும், மாநாட்டிற்குப் பிறகும் இந்த ஏற்பாடுகளை செய்து, அதன் இறுதிகட்ட பணிகளை மேற்கொள்வதில் தம் பங்களிப்பை வழங்கியுள்ளார்கள்; இப்பொழுதும் பணியாற்றி வருகின்றார்கள். அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத் பெண்களிடத்திலும், ஆண்களிடத்திலும், குழந்தைகளிடத்திலும் - இவர்கள் அனைவரிடத்திலும் இது எப்படிப்பட்ட தனிச்சிறப்பாக உள்ளது என்றால், அதை அந்நியர்களும் புகழ்கின்றார்கள். மேலும் இந்த பணியாளர்கள் தம்முடைய கடமைகளை நிறைவேற்றியவாறு தம் பணிகளை செய்து கொண்டிருக்கும் போது அவை மௌனமான தப்லீஃக்காக இருக்கின்றது. மாநாட்டின் அனைத்து துறைகளுடைய பணியாளர்களுக்கும் இதில் முக்கிய பங்கு உள்ளது. அவர்கள் நுழைவு வாசலில் பணியாற்றிக் கொண்டிருந்தாலும் சரி; கேட்டில் இருந்தாலும் சரி; செக்கிங் டியூட்டியில் இருந்தாலும் சரி; பார்க்கிங்-ல் இருந்தாலும் சரி; உணவு சமைக்கக் கூடிய இடத்தில் இருந்தாலும் சரி; தூய்மை பணியில் இருந்தாலும் சரி; சிறு பிள்ளைகளுக்கு தண்ணீர் வழங்கக் கூடிய டியூட்டி உள்ளது. அதில் இருக்கிறார்கள். அல்லது பல்வேறு வகையான சிறு பிள்ளைகள் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். ஆண்டு மாநாட்டிற்காக வேலை செய்யக் கூடிய எல்லாத் துறையும் எல்லா வகையிலும் மிகவும் நல்ல முறையில் பணியாற்றுவதை காண முடிகின்றது. அவர்கள் நன்றிக்கு உரியவர்களாக இருக்கின்றார்கள். சிறு, சிறு பலவீனங்கள் ஏற்பட்டு விடுகின்றன. அவை சிலருக்கு தென்படவும் செய்கின்றன. ஆனால், இவ்வளவு பெரிய ஏற்பாட்டில் இவ்வாறான பலவீனங்களை கண்டும் காணாமல் விட்டு விட வேண்டும். எவ்வாறிருப்பினும், இந்த அனைத்து டியூட்டிகளையும் செய்யக் கூடியவர்கள் விருந்தினர்களுக்கு தொண்டு செய்வதுடன் ஒரு மௌனமான தப்லீஃக்கும் செய்து கொண்டிருக்கின்றார்கள். பல மக்கள் பணியாளர்களை குறித்து கூறும்போது புகழ்ந்து கூறுகின்றார்கள்; அவற்றை எழுதி அனுப்புகிறார்கள். விருந்தினர்களும், அன்னியர்களாக வந்திருக்கின்ற மக்களும், அதேபோன்று MTA மூலமாக தங்கள் வரை மாநாட்டின் நிகழ்ச்சிகளை அழகிய முறையில் கொண்டு வந்ததற்காக உலகில் பல்வேறு நாடுகளில் உள்ள மக்களும் நன்றியை தெரிவித்துள்ளார்கள்.

ஆகவே, இந்த அனைத்து பணியாளர்களுக்கும் நானும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வருடம் பிரிட்டன் பணியாளர்களுடன் மொரீசியஸில் இருந்தும் முதல் முறையாக பெரும் எண்ணிக்கையில் குத்தாம் மற்றும் பணியாளர்கள் வந்திருந்தார்கள். மிகவும் நன்கு பணியாற்றினார்கள். அதேபோன்று கனடாவில் இருந்து குத்தாம் வந்திருந்தனர். அவர்கள் இறுதிக்கட்ட பணிகளில் உதவி செய்து கொண்டிருக்கின்றனர். அல்லாஹ் இவர்கள் அனைவருக்கும் கூலியை வழங்குவானாக. பிரஸ் & மீடியாவுடைய கவரேஜும் இவ்வருடம் மிகவும் நன்றாக இருந்தது. அண்டை அயலார்களும் மகிழ்ச்சி அடைந்தனர். ஒவ்வொரு வருடமும் அவர்களின் சார்பாக முறையீடுகள் வருவதுண்டு. இவ்வருடம் முறையீடுகள் வரவில்லை. இன்னும் கூறுவதென்றால், அவர்களைப் பொறுத்த வரை கடந்த வருடத்தை விட இவ்வருடம் கலந்து கொண்டோரின் எண்ணிக்கை குறைவு ஆகும். ஆகவே இவ்வளவு எளிதாக டிராபிக் பணிகள் நடந்துள்ளது என்று அவர்கள் எண்ணி இருந்தார்கள். ஆனால், கடந்த வருடத்தை விட இவ்வருடம் எண்ணிக்கை 2000 அதிகமாகும் என்று அவர்களுக்கு இது பற்றி கூறப்பட்ட போது மிகவும் வியப்படைந்து விட்டனர். மாஷா அல்லாஹ். மிகவும் அருமையான ஏற்பாடாக இருந்தது. நம்முடைய இப்பகுதியின் கவுன்சிலர் அஹ்மதியாவார்; முரப்பியும் ஆவார். அவர் அனைத்து அண்டை அயலார்களுடனான தொடர்புகளிலும், டிராஃபிக் திட்டங்களிலும் மிகவும் நல்ல பங்களிப்பை வழங்கியுள்ளார். அல்லாஹ் அவருக்கும் நற்கூலியை வழங்குவானாக. எவ்வாறிருப்பினும், இப்போது நான் தாக்கங்களை எடுத்துக் கூறுவேன். இந்த தாக்கங்களை எடுத்துக் கூறக் கூடியவர்களின் உள்ளங்களையும் அல்லாஹ் திறப்பானாக. மேலும் அவர்கள் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியுடைய உண்மையான பொருளை புரியக் கூடியவர்களாக ஆகட்டுமாக! மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் தோற்றத்தின் நோக்கமாக இருந்ததை பெறக் கூடியவர்களாக நாம் திகழ்வோமாக. மேலும் அவ்விஷயங்களை இம்மூன்று நாட்களுக்காக மட்டுமின்றி நாம் அவற்றை நம் வாழ்வின் அங்கமாகவும் ஆக்குவோமாக!

பிரெஞ்ச் கியானாவில் இருந்து இஸ்மாயீல் பேலன் ஸாஹிப் மாநாட்டில்

கலந்து கொண்டார். அவருக்கு ஜமாஅத்துடனான தொடர்பு பழைய தொடர்பாகும். ஆனால், பைஅத் செய்திருக்கவில்லை. மாநாட்டின் போது பைஅத் செய்வதற்காக நல்வாய்ப்பு அவருக்கு கிடைத்தது. அவர் கூறுகின்றார்:

உலகின் அனைத்து பெரும் மொழிகளைப் பேசக் கூடியவர்களும், பெரும் இனத்தைச் சார்ந்த மக்களும் ஒன்று கூடிய நிகழ்ச்சியை நான் என் வாழ்வில் ஒருபோதும் கண்டதில்லை. இந்த மாநாட்டில் கலந்து கொண்ட பிறகு, இது உண்மையான ஜமாஅத் ஆகும். மேலும், இது முஹம்மது (ஸல்) அவர்களின் ஜமாஅத் ஆகும். நாம் நமது நபி (ஸல்) அவர்களின் குரலை செவிமடுத்தவாறு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆகிய காலத்தின் இமாமை ஒப்புக் கொள்ளவில்லை என்றால், நாம் வழிகேட்டில் சென்று விடுவோம் என்ற எனது நம்பிக்கை திடமான நம்பிக்கையாக மாறியது. அவர் கூறுகின்றார்: அல்லாஹ் என்னை இந்த பாதையில் வழிகாட்டி உள்ளான் என்று எனக்கு நம்பிக்கை உள்ளது. இன்று முஸ்லிம்கள் ஒன்றுபட விரும்புகிறார்கள் என்றால் அவர்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்து கிலாஃபத்தின் கையில் பைஅத் செய்து இந்த அருளுக்குரிய ஜமாஅத்தில் இணைந்து விட வேண்டும். பிறகு கூறுகிறார்:

ஆண்டு மாநாட்டின் ஏற்பாடுகளும் நிகரற்றதாக இருந்தன. ஒவ்வொரு பணியாளரும் எப்பொழுதும் சிரித்த முகத்துடன் காணப்பட்டார். அவர்களுடைய முகத்தில் எவ்வித நயவஞ்சகத் தன்மையும் இருக்கவில்லை. ஒவ்வொரு பணியாளரும் மனமகிழ்ச்சியுடன் விருந்தினர்களுக்கு தொண்டு செய்து கொண்டிருந்தார். நான் எவரையும் அறிந்திருக்கவில்லை. ஆனால், சந்திக்கக் கூடிய ஒவ்வொருவரும் நாங்கள் பல வருடங்களாக ஒருவர் மற்றவரை அறிந்தது போன்று சந்தித்தார். கூறுகின்றார்:

மாநாட்டிற்கு முன்பும் பல வருடங்களாக முஸ்லிமாக இருந்தேன். நான் முஸ்லிமாக மாறி இருந்தேன். இஸ்லாமிய கட்டளைகளின் படி அமல் செய்வதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தேன். ஆனால், எப்பொழுதும் ஏதோ ஒரு குறை இருப்பது போன்று தோன்றியது. ஆனால், இந்த மாநாட்டில் கலந்து கொண்ட பிறகு எனது அந்த குறை நீங்கி விட்டதாக நான் உணர்கிறேன்.

ஜப்பானிலிருந்து வந்திருந்த புத்த மதத்தினுடைய தலைமை போதகர் யோஷிதா ஸாஹிப் கூறுகின்றார்: நாங்கள் மாநாட்டின் அனைத்து அமர்வுகளிலும் கலந்து கொண்டோம். என் மனைவி பெண்கள் கூடாரத்திற்கும் சென்றார். நாங்கள் கண்காட்சிகளையும் கண்டோம்; சிறிது நேரம் கடைவீதிக்கும் சென்றோம். ஒவ்வோர் இடத்திலும் ஒரு விஷயம் முன்னுதாரணமாக திகழ்ந்தது. அது என்னவென்றால், தொண்டு செய்யக் கூடிய தன்னார்வலர்கள் விழிப்புடனும், சுதாரிப்புடனும் தென்பட்டனர். முதல் நாளிலிருந்து இறுதிநாளின் இறுதி நொடி வரை பணியாளர்களின் உத்வேகமும், ஆர்வமும் அவ்வாறே நிலை பெற்றிருந்தது. மாநாட்டில் கலந்து கொண்ட அஹ்மதி நண்பர்களும் மிகவும் விருந்தோம்பல் செய்யக் கூடியவர்களாகவும், பழகக் கூடியவர்களாகவும் இருந்தார்கள். உலகின் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து வரும் மக்கள் ஓரிடத்தில் ஒன்று கூடும்போது பல விஷயங்கள் மாறுபட்டதாக தென்படும். பல விவகாரங்கள் தோன்ற முடியும். ஆனால், இங்கு ஒவ்வொருவருடைய நல்லொழுக்கமும் நடவடிக்கையும் ஒரே போன்றுதான் தென்பட்டது. ஒருவர் எங்கேயாவது தடுக்கப்பட்டால் அவர் அங்கேயே நின்று விடுகின்றார். தொழுகைக்காகவோ அல்லது மாநாட்டிற்காகவோ அழைக்கப்பட்டால் அங்கு தாமதம் இன்றி சென்றடைந்து விடுகிறார்.

அவர் கூறுகின்றார்: எங்களுக்கு மாநாட்டின் இக்காட்சி மறக்க இயலாததாக இருந்தது.

அவர்கள் என்னையும் சந்தித்தார்கள். நான் அவர்களிடம், ஏக இறைவன் மீது நம்பிக்கை கொள்வது அவசியமாகும்; இதைப் பற்றி சிந்தியுங்கள்; சிந்தித்துப் பாருங்கள் என்று கூறியிருந்தேன். அதேபோல் மனித குலத்துடனான நேசம் பற்றியும் அவர்களிடம் வலியுறுத்தி இருந்தேன்.

அவர் கூறுகின்றார்: நான் புத்த மதத்தை பின்பற்றக் கூடியவனாக இருக்கின்ற காரணத்தினால் பாரம்பரிய வழக்கப்படி ஏக இறைவனை ஏற்றுக் கொள்வதில்லை. ஆனால் , இந்த பிரபஞ்சத்தை படைத்த எஜமானன் ஒருவன் இருக்கின்றான். நாம் அனைவரும் அவனுடைய படைப்பினங்கள் ஆவோம். படைப்பாளனும், எஜமானனுமாகிய இறைவனின் நெருக்கத்தை நாம் பெற இயலும் என்று எனது உள்ளம் கூறுகின்றது.

எவ்வாறிருப்பினும், அல்லாஹ்வின் பக்கம் அடியெடுத்து வைப்பதற்கான சிந்தனை கொஞ்சமாவது அவர்களிடத்தில் உருவாகியுள்ளது.

கோஸோவிலிருந்து அனீஸ் நஸீர் ஸாஹிப் என்ற ஒரு விருந்தினர் வந்திருந்தார். அவர் கூறுகின்றார்: முதல் முறையாக மாநாட்டில் கலந்து கொள்வதற்கான வாய்ப்பு கிடைத்தது. மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. ஒவ்வொரு விஷயமும் ஒழுங்கமைப்புடன் சென்று கொண்டிருந்தது. முக்கியமாக சொற்பொழிவுகள் மிகவும் பயனளிக்கக் கூடியவையாக இருந்தன. கலீஃபா அவர்களின் சொற்பொழிவுகளை கேட்டு எனக்குள் நான் ஓர் ஆன்மிக மாற்றம் உருவாவதை காண்கிறேன். மேலும் அவற்றுடன் நான் திரும்பிச் செல்வேன். இங்கு வந்து நான் தொழுததால் எனது உள்ளத்தில் ஒரு நிம்மதியை உருவாக்கி விட்டது.

அவர் கூறுகின்றார்: நான் ஒரு வயோதிகன் ஆவேன். அடுத்த வருடம் மீண்டும் இந்த ஆன்மிக சூழலில் இணைவதற்கான வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்று துஆ செய்கிறேன்.

அவர் கூறுகின்றார்: இந்த சூழல் எனக்குள் இஸ்லாம் அஹ்மதிய்யத்துடைய ஒரு நேசத்தை நிரப்பி விட்டது. நான் செல்லும் இடத்தில் கண்டிப்பாக இதைப் பற்றி கூறுவேன். அஹ்மதிய்யத்தின் உண்மையான போதனையை படியுங்கள் என்று மக்களுக்கும் இதன் பக்கம் கவனமூட்டுவேன். கலீஃபா அவர்களின் நிறைவுரை சான்றுகளால் நிரம்பி இருந்தது. அதைப் பற்றியும் கண்டிப்பாக கூறுவேன். ஏனெனில், நானே அதற்கு சாட்சியாக இருக்கின்றேன்.




இவருடைய நகரத்தின் பெயர் பெரஷ்தீனியா என்பதாகும். எவ்வாறிருப்பினும், பைஅத் செய்வதற்கு முன்பு உள்ள விஷயமாகும்.

அவர் கூறுகின்றார்: அங்கு ஜமாஅத்தின் மிஷன் ஹவுஸ் இருந்தது. அதற்கு அருகில் ஒரு கடை இருந்தது. நான் மிஷன் ஹவுஸுக்கு சென்று தொழுகிறேன் என்று அந்த கடைக்காரருக்கு தெரிய வந்தபோது நான் கடைக்கு செல்லும் போதெல்லாம் அந்த கடையினுடைய எஜமானர் - அவர் முஸ்லிமாக இருந்தார் - என்னிடம், நீங்கள் இந்த பள்ளிவாசலுக்கு செல்ல வேண்டாம்; இவர்கள் காதியானிகள் ஆவர். இவர்கள் புதிய நபியை உருவாக்கி இருக்கின்றார்கள். அந்த நபி பெருமானார் (ஸல்) அவர்களை நவூதுபில்லாஹ் ஏசி பேசுகிறார்; இஸ்லாத்தில் பித்அத்துகளை உருவாக்கியுள்ளார். இஸ்லாமிய போதனையை மாற்றிவிட்டார் என்று கூறினார். ஆனால், நான் தொடர்ச்சியாக தொழுகைக்கு சென்று கொண்டிருந்தேன். அல்லாஹ் எனது உள்ளத்தை அஹ்மதிய்யத்திற்காக பிரகாசமாக்கினான். ஆனால், இப்பொழுது இந்த சொற்பொழிவை கேட்ட பிறகு, ஜமாஅத்தின் எதிரிகள் ஜமாஅத்தை விட்டு மக்களை எவ்வாறு விலக்குகிறார்கள்? என்பதை பற்றிய உணர்வு மீண்டும் ஒருமுறை எனக்கு தோன்றியது. எவ்வாறிருப்பினும், நான் திரும்பிச் சென்று இந்த சொற்பொழிவை அவர்களுக்கு முன்னால் எடுத்து வைத்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் எழுத்துக்களில் இருந்து பதில் கொடுப்பேன்.

சிலீயிலிருந்து வருகை தந்திருந்த ஒரு விருந்தினர் உமர் தீகூர் ஸாஹிப் என்பவர் ஆவார்கள். அவர்கள் சிலீ அரசாங்கத்தில் டைரக்டர் ஆஃப்வொர்சிப் என்ற பொறுப்பில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கூறுகிறார்கள்: சிலீ நாட்டில் உள்ள அனைத்து மார்க்க அமைப்புகளின் ரிஜிஸ்ட்ரேஷன் மற்றும் இதர விவகாரங்களை குறித்து அரசாங்கத்திற்கு வழிகாட்டுவது எனது கடமைகளில் ஒன்றாகும். அஹ்மதிய்யா ஜமாஅத்தைக் குறித்து நாட்டில் உள்ள மற்ற முஸ்லிம் அமைப்புகளிடம் கருத்து கேட்டபோது அனைவரும் எதிர்மறையான விஷயங்களை கூறினார்கள். இவர்கள் முஸ்லிம்கள் கிடையாது என்பதே அதனுடைய சுருக்கம் ஆகும். மாநாட்டில் உங்களுடைய கலீஃபாவை சந்தித்தேன். இதற்கு பிறகு நான் உங்கள் ஜமாஅத்திடம் வாக்குறுதி அளிப்பது என்னவென்றால் நான் எனது பங்களிப்பை முழுமையாக செலுத்துவேன். என் கீழ் உள்ள மக்களுக்கு முன்னால் எனது அனுபவத்தை வெளிப்படுத்தியவாறு அஹ்மதிகள் முஸ்லிம் மட்டுமின்றி மிகச் சிறந்த முன்னுதாரணமான முஸ்லிம்கள் ஆவார்கள் என்று கூறுவேன்.

அவர் கூறுகின்றார்: உங்களுடைய ஜமாஅத் சிலீ நாட்டில் ஏற்படுத்தப்படுவதைக் குறித்தும் நான் எனது முழுமையான முயற்சியை வழங்குவேன்.

குறிப்பாக முதல் நாளில் கலீஃபா அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவு தமக்கு மிகவும் பிடித்தமானதாக இருந்தது. அதில் அவர்கள் ஒழுக்கம் தொடர்பாகவும், ஏற்பாட்டு விஷயங்களை குறித்தும் அவர்களே குத்பா கொடுத்தார்கள் என்று அவர் தெரிவித்துள்ளார்.

அவர் கூறுகின்றார்: நான் அதிகமான

அளவில் மார்க்க மாநாடுகளில் கலந்து கொண்டுள்ளேன். ஆனால், எந்த ஒரு மார்க்க தலைவரும் ஏற்பாட்டு விவகாரங்களில் வழிகாட்டியதை நான் கண்டது கிடையாது. நான் இந்த குத்பாவை கேட்டு மிகுந்த வியப்பிற்கு ஆளானேன்; அத்துடன் மகிழ்ச்சியும் ஏற்பட்டது. ஏனெனில், உங்களுடைய கலீஃபா அவர்கள் ஜமாஅத்தின் ஆன்மிக, நல்லொழுக்க விஷயங்களை மேம்படுத்துவதுடன் நிர்வாக விஷயங்களை மேம்படுத்துவதற்காகவும் முயற்சி செய்கிறார்கள் என்று விஷயங்களில் இருந்து தெரிய வருகின்றது.

ஹாலந்தைச் சேர்ந்த மிஸ் பெட்ரீஷியா (Patricia) என்ற பெண்மணி கூறுகின்றார்: யூ.கே ஆண்டு மாநாட்டின் விருந்தோம்பலுக்காக நான் தங்களுக்கு முதலில் நன்றியை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். உலகின் பல்வேறு பகுதிகளைச் சார்ந்த பல மக்கள் வந்திருந்தார்கள். ஒரு வினோதமான சகோதரத்துவத்தின் வெளிப்பாடு இருந்தது. இந்தோனேஷியாவில் இருந்து அமெரிக்கா வரை உள்ள நாடுகளைச் சார்ந்தவர்கள் இருந்தார்கள். நான் தங்களுடைய பீஸ் வாக், (Peace walk)அமைதி கருத்தரங்கு போன்ற ஒன்றுகூடல் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டுள்ளேன். இப்பொழுது இந்த மாநாட்டிற்கு வந்திருப்பது எனது அடுத்த கட்ட நடவடிக்கையாக இருந்தது. இங்கு தினம்தோறும் ஆயிரக்கணக்கான மக்களை கையாள்வது, ஒரு கிராமத்தை போன்று அமைப்பை ஏற்படுத்தி அதில் எல்லா வகையான பொருட்களையும், வசதிகளையும் மிக நல்ல முறையில் ஏற்படுத்தியிருந்தார்கள். பெரும் எண்ணிக்கையிலான மக்கள் மற்றவர்களுடன் ஒத்துழைத்தவாறு தென்பட்டார்கள். மக்கள் வரிசைகளில் நின்று சிரமப்படுவதை காண முடியவில்லை. மக்கள் உடனுக்குடன் சுத்தத்தையும் பேணி வந்தார்கள். மாநாட்டை சாத்தியப்படுத்தியதற்காக பணியாளர்கள் மற்றும் தன்னார்வ தொண்டர்களின் குழுவுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இளைஞர்கள், மாணவர்கள் மற்றும் ஒவ்வொருவரும் சின்ன சின்ன பணிகளிலும் கலந்து கொள்வது, பெரும் நோக்கத்திற்காக ஒத்துழைப்பு கொடுப்பது ஆகியவற்றை காண்பது எப்பொழுதும் மகிழ்ச்சி தரக் கூடிய விஷயமாகும். பல்வேறு அமர்வுகளில் பங்கெடுத்து தனித்துவமான அமைதியை உணர்ந்தேன். முக்கியமாக உலகளாவிய பைஅத் அமர்வை வாழ்க்கை முழுவதும் நினைவில் வைத்திருப்பேன். அஹ்மதிய்யா ஜமாஅத் செய்வதை போன்று உலகில் ஒவ்வொரு நபரும் மனிதத்துவத்திற்காக அதிக புரிதலை உருவாக்கி விட்டால் அனுதாபத்தை உருவாக்கி விட்டால் உலக விவகாரங்களுக்கு தீர்வு காண முடியும்.

அர்ஜென்டைனிலிருந்து வருகை தந்திருந்த தாமஸ் ரைனல் ஸாஹிப் (Tomas Randle) என்ற ஒரு விருந்தினர் அர்ஜென்டைனுடைய நேஷனல் செக்ரெட்டரி ஆப் வொர்சிப் என்ற அமைப்பில் பிரதிநிதித்தும் வகித்திருந்தார்கள். அவர்கள் கூறுகிறார்கள்: நான் உங்களுடைய ஜமாஅத்தின் மாநாட்டை ஏக்க கண்ணோட்டத்தோடு கண்டேன். எந்த அளவு சிறப்பாகவும், ஒழுங்கமைப்புடனும் நீங்கள் இந்த அளவு பெரிய கூட்டத்திற்கான ஏற்பாட்டை செய்துள்ளீர்கள். இது எங்களது நாட்டில் சாத்தியமற்ற விஷயமாகும். இன்னும் கூறுவதென்றால், காவல்துறையை வைத்துக் கொண்டும் கூட இதுபோன்ற சிறந்த வகையில் இவ்வளவு பெரிய கூட்டத்தை நடத்துவதை எண்ணிப் பார்க்க முடியாது. சமூக அழுத்தம் மற்றும் மேற்கத்திய உலகின் தாக்கம் இருந்தபோதிலும் நீங்கள் உறுதியுடன் உங்களது அடிப்படை விஷயங்களில் நிலைபெற்று இருக்கின்றீர்கள் என்ற வகையில் கலீஃபா அவர்கள் பெண்களுக்கு ஆற்றிய சொற்பொழிவு எனக்கு மிகவும் பிடித்திருந்தது. கிறிஸ்தவன் என்ற வகையில் நான் இங்கு கூறப்பட்ட அனைத்து விஷயங்களிலும் உடன்படவில்லைதான். ஆயினும், குறிப்பாக குடும்ப வாழ்க்கை தொடர்பாக கூறப்பட்ட விஷயங்கள் முஸ்லிம் அல்லாதவர் என்ற வகையில் எனக்கு மிகவும் பயன் தரக் கூடியவையாக இருந்தன.

தைவானில் இருந்து வந்திருந்த டாக்டர் கிறிஸ்டி ச்சாங் ஸாஹிபா என்ற விருந்தாளி கூறுகிறார்: ஏர்போர்ட்டில் இருந்து நாங்கள் வரவேற்கப்பட்டோம். நல்ல விருந்தோம்பல் செய்யப்பட்டது. பிறகு மாநாட்டில் கலந்து கொள்வதற்கான வாய்ப்பு கிடைத்தது. ஆயிரக்கணக்கான தன்னார்வ தொண்டர்கள் வேலை செய்வதை கண்டோம்; எனது வியப்பிற்கு அளவே இருக்கவில்லை. நான் உலகின் பல நாடுகளில் பல பெரும் மாநாடுகளில் கலந்து கொண்டுள்ளேன். ஆனால் தன்னார்வ தொண்டர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்வளவு பெரிய மாநாட்டை ஒருபோதும் கண்டதில்லை. கலீஃபா அவர்கள் பெண்களுக்கு ஆற்றிய சொற்பொழிவில் அஹ்மதி சிறுமிகள் வாழ்வை கழிக்கக் கூடிய மிக அழகிய முறையை கற்றுக் கொடுத்திருந்தார்கள். அந்த சொற்பொழிவின் போது சிறுமிகளுடைய உணர்ச்சி வெளிப்பாடுகளை நான் கவனித்துக் கொண்டிருந்தேன். எந்த அளவு கவனமாக சிறுமிகள் அந்த அறிவுரைகளை கேட்டுக் கொண்டிருந்தார்கள் என்றால் அஹ்மதி சிறுமிகளும், பருவ வயதை அடைந்த சந்ததிகளும் தம் கலீஃபாவை எந்த அளவு நேசிக்கின்றார்கள் என்று அதிலிருந்து அனுமானிக்க முடிந்தது. நான் முதல்முறையாக ஜமாஅத்தின் இமாம் அவர்களை சந்திக்கின்றேன். எங்களுடைய சந்திப்பு மிகவும் சம்பிரதாயமான முறையில் நிகழும் என்றும் பல வகையான மெனக்கெடல்களையும், வழிகாட்டல்களையும் எதிர்கொள்ள வேண்டியது வரும் என்றும் நான் நினைத்திருந்தேன். ஆனால் எங்களுடைய அனைத்து கலந்துரையாடலும் சம்பிரதாயமான முறையன்றி இருந்தன. நலம் விசாரித்தார்கள்; தைவானை குறித்து கேட்டறிந்தார்கள். எவ்வளவோ கேள்விகள் கேட்க வேண்டும் என்றிருந்தோம். ஆனால் இமாம் ஜமாஅத் அவர்களின் கேள்விகளுக்கு பதில் கொடுப்பதில் எந்த அளவு மூழ்கிப் போனோம் என்றால் கேட்பதற்கு எங்களுக்கு சந்தர்ப்பமே அமையவில்லை.

எவ்வாறு இருப்பினும் மாநாடு அவர்கள் மீது நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL
MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

தைவானில் இருந்து வருகை தந்திருந்த டாக்டர் ஃபிரேங்க் ஸாஹிப் என்ற ஒரு விருந்தாளி கூறுகின்றார்: மிக நீண்ட பயணம் செய்து இந்த மாநாட்டில் கலந்து கொண்டோம். தைவானில் இருந்து புறப்பட்டு பெய்ஜிங்தான் வந்தடைந்திருந்தோம்; தைவானில் புயலின் காரணமாக ஃபிளைட் கேன்ஸல் ஆகிவிட்டது. ஆனால் அவ்வாறிருந்தும் நாங்கள் பயணம் மேற்கொள்வதில் வெற்றி பெற்றோம். நலமுடன் வந்தடைந்து விட்டோம். எங்களுடைய இந்தப் பயணம் ஓர் அற்புதமாக இருந்தது என்று எனக்கு தோன்றுகின்றது. மாநாட்டில் கலந்து கொண்ட பிறகு இது இறைவனுடைய நியதியாகும் ;அவனுடைய அருளால் நாங்கள் மாநாட்டில் கலந்து கொண்டோம் என்று எங்களுக்கு தோன்றுகின்றது. மாநாட்டின் துவக்க உரையில் ஜமாஅத்தினுடைய இமாம் அவர்கள் இது எவ்வித உலக மாநாடும் கிடையாது; இது ஓர் ஆன்மிக ஒன்றுகூடல் ஆகும் என்று கூறியது போன்று மீண்டும் எனது நம்பிக்கை உறுதியடைந்தது. ஏனெனில், வெளிப்படையில் கடினமான சூழ்நிலை இருந்த போதிலும் இறைவன் மாநாட்டில் கலந்து கொள்வதற்கான வாய்ப்பை எங்களுக்கு வழங்கினான். இந்த அனைத்தும் இறைவனால் வழங்கப்பட்டதாகும்; அற்புதத்தின் விளைவே ஆகும்.

அவர் கூறுகின்றார்: கணவன் மனைவியாகிய நாங்கள் தைவானிலிருந்து மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடிய முதன்மையான மக்களில் உள்ளோம். அஹ்மதிய்யா ஜமாஅத் மிகவும் அமைதியான ஜமாஅத்தாகும்; மிகவும் கட்டமைப்பான நல்லொழுக்கமுடைய ஜமாஅத்தாகும் என்று எங்கள் நாட்டினரிடம் நாங்கள் கூறுவோம் என்று இந்த மாநாட்டில் இருந்து இந்த உறுதிமொழியுடன் நாங்கள் செல்கிறோம். இனிவரக் கூடிய வருடங்களில் இன்னும் அதிகமான விருந்தினர்களை ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக கவனமூட்டுவோம்.

கனடாவைச் சேர்ந்த யாஸீன் அஹ்மது ஸாஹிப் என்ற ஒரு விருந்தினர் - இவர் ஈரானிய வழித் தோன்றல் என்று நினைக்கிறேன். தத்துவத்தில் PHD டிகிரி பெற்றுள்ளார். எழுத்தாளரும் ஆவார். அவர் கூறுகிறார்: அஹ்மதிய்யா ஆண்டு மாநாட்டை நான் மார்க்கத்தின் தோற்றத்தில் நுட்பம் மற்றும் அறிவு ஆகியவற்றின் மகத்துவமான காட்சியாக கண்டேன். ஆண்டு மாநாட்டின் ஆன்மா முஸ்லிம்களுக்கு இடையில் சமத்துவம் எனும் அடையாளங்களால் நிறைந்திருந்தது. நான் இந்த மாநாட்டில் கலந்து கொண்ட நொடிப்பொழுது முதலே, காய்ந்து போன, நெகிழ்வற்ற மார்க்க விளக்கங்களை விட்டு முஸ்லிம்கள் விலகி, பூமியில் வசிக்கின்ற மனிதர்களுடன் அனுதாபம் எனும் திறந்த வானத்தின் பக்கம் திரும்பிச் செல்வதை உணர்ந்தேன். ஜமாஅத்தை கண்டபோது நான் இதை அனுமானித்தேன். அஹ்மதிகளின் மகத்துவம், கண்ணியம், பொறுமை, சகிப்புத் தன்மை மற்றும் இஸ்லாமிய போதனைகளுக்கு நடுநிலையான விளக்கங்கள் ஆகியவை பல நூற்றாண்டுகளாக இருந்த மத பயங்கரவாதம் மற்றும் இரத்தம் சிந்துதல் ஆகியவற்றிற்கு பிறகு இறை நேர்வழியின் நிழலில் ஒரு நிம்மதி நிறைந்த அமைதி

நிறைந்த வாழ்வின் நற்செய்தியாக இருந்தது. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் போதனைகள் புதிய நாகரீகத்துடன் கலந்து செல்வது, தெளிவாக காட்டப்பட்ட அழகிய அம்சங்களுள் ஒன்று ஆக இருந்தது. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் சிந்தனைகள் அதிகமான அளவிலும், மகத்துவமான முறையிலும், விரைவாகவும் முஸ்லிம்களிடத்திலும் பூமியில் வசிக்கக் கூடிய இதர மக்களிடத்திலும் பரவிவிடும். அதன் மூலமாக இரட்சிப்பை பெறக் கூடிய ஒவ்வொருவரும் மகிழ்ச்சி மற்றும் வெளிப்படையான வாழ்வின் அனுபவத்தை பெற இயலும் என்று நான் நம்புகிறேன்.

பெலீஸில் இருந்து வந்திருந்த ரோனால்ட் ஹைட் (Ronald Hyde) ஸாஹிப் என்ற விருந்தினர் பைஅத் நிகழ்ச்சியின் போது தமக்கு இருந்த உணர்வுகளை எடுத்துரைக்க இயலாது என்று கூறுகின்றார். அல்லாஹ்வின் இருப்பை அவர் உணர்ந்தார். பல ஆண்கள் உலகை பற்றிய கவலை இன்றி தேம்பித் தேம்பி அழுதார்கள்; அல்லாஹ்விடம் பாதுகாப்பிற்கான துஆ செய்தார்கள். பைஅத்தின் இந்த அனுபவம் அவருடைய வாழ்வில் ஆழமான தாக்கங்களை விட்டுச் சென்றுள்ளது. இவ்வளவு பெரும் மாநாட்டில் இவ்வளவு அதிக எண்ணிக்கையில் மக்கள் இருக்கும்போது அவர்கள் எவ்வித மதுபானமோ, இசையோ இன்றி இருப்பதை காண்பது நிச்சயமாக வியப்பை தருவதாக இருந்தது. ஒவ்வொருவரும் ஆன்மிகத்தில் மேம்பட வேண்டும் என்று விரும்பினர். நிச்சயமாக அது புகழத் தக்கதாக இருந்தது. நிச்சயமாக அது வாழ்வை மாற்றக் கூடிய அனுபவமாக இருந்தது.

டியூட்டி கொடுக்க கூடியவர்கள் மட்டுமின்றி கலந்து கொள்ள கூடியவர்களாலும் ஒரு மௌனமான தப்லீஃக் நடைபெற்றது.

போலேவியாவைச் சேர்ந்த ஜமாஅத்தின் முபல்லிஃக் கூறுகிறார்: கார்லோஸ் ஹூகோ (Carlos Hugo) ஸாஹிப் இம்முறை மாநாட்டிற்கு வந்திருந்தார். அவர் மூன்றாவது முறையாக வந்துள்ளார். கொஞ்ச காலமாக இஸ்லாமிய போதனையைப் பற்றி ஆய்வு மேற்கொண்டு வந்தார். ஒரு மாதத்திற்கு முன்பு அவர் பைஅத்தும் செய்து விட்டார். அவருக்கு ஆண்டு மாநாட்டில் உலகளாவிய பைஅத் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் நல்வாய்ப்பும் கிடைத்தது. அவர் கூறுகின்றார்:

யூ.கே ஆண்டு மாநாடு என் வாழ்வின் மிக முக்கியமான ஆன்மிக அனுபவமாக இருந்தது. எனது உள்ளமும், எனது ஆன்மாவும் உலகளாவிய பைஅத் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பிறகு ஆன்மிகத்தால் நிறைந்து விட்டதாகவும், நான் ஓர் உண்மையான அஹ்மதியாக ஆகிவிட்டேன் என்றும் நான் உணர்கின்றேன்.

புதிய அஹ்மதி என்ற வகையில் அவர் கூறுகின்றார்: தொழுகையை கவனமாக தொழுங்கள்; இறைவனிடம் உறுதியான தொடர்பை உருவாக்குங்கள்; .போலேவியாவின் ஜமாஅத் அஹ்மதிகளுக்கு திருக்குர்ஆன் ஓதுவதன் பக்கம் கவனமூட்டுங்கள் என்று எனக்கு கலீஃபா அவர்கள் அறிவுரை செய்தார்கள்.

அவர் கூறுகிறார்: இதன்படி நானும் செயல்படுவேன்; மற்றவர்களுக்கும் கூறுவேன்.

யூராகூவேயிவிலிருந்து வந்திருந்த மாரியா ஸோல் காபேலேரோ ஃபிரேன்கோ (Maria sol Caballero franco) எனும் ஜமாஅத் அல்லாத விருந்தினர் கூறுகிறார்: ஆண்டு மாநாடு என்னுடைய எதிர்பார்ப்புகளை விட மிகவும் சிறப்பானதாக இருந்தது. விருந்தினர்களின் தங்குமிடம் அனைத்தையும் விட முன்னுதாரணமாக இருந்தது. சொற்பொழிவுகள் வசீகரிக்க கூடியவையாக இருந்தன. முதல் அமர்வு எனக்கு பிடித்தமானதாக இருந்தது. எல்லாரிடத்திலும் அன்பு; எவரிடத்திலும் இல்லை வெறுப்பு என்ற தூதுச் செய்தியை மேலோங்க செய்வது, பரப்புவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். நான் ஒட்டுமொத்த சூழலிலும் சகோதரத்துவத்தின் இனிமையை உணர்ந்தேன். ஏற்பாட்டாளர்களும் பெரும் பங்களிப்பை வழங்கினார்கள். மிகப் பெரும் எண்ணிக்கையைக் கொண்ட மக்கள் இருந்த போதிலும் அதில் ஒருபோதும் கூட்ட நெரிசலை காணவில்லை. மக்களை கட்டுப்படுத்த இயலாது என்ற உணர்வு தோன்றவில்லை. கார்கள் செல்வதற்கு நன்கு திட்டமிடப்பட்ட சாலைகளும், தெளிவான வழிகாட்டல்களும் இருந்தன. இவை மகத்துவமிக்க ஏற்பாடுகளாக இருந்தன. சந்தேகத்திற்கு இடமின்றி இது கலந்து கொண்ட பலரை தாக்கத்திற்கு ஆளாக்கி இருக்கும். மாநாட்டில் கலந்து கொண்டது எனது ஆன்மிகத்தில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியது. மிகவும் நினைவு கூரத் தகுந்த தருணங்களில் ஒன்று, ஞாயிற்றுக்கிழமையன்று அஹ்மதிகள் உறுதிமொழி கூறியதாகும். அதாவது பைஅத் நிகழ்ச்சியில் அதாவது அங்கு அனைவரும் ஒன்றிணைந்து துஆ செய்தார்கள்; கண்ணீர் வடித்தார்கள். இவ்வாறான உறுதியான ஈமானிய உணர்வை இதற்கு முன்பு நான் கண்டது கிடையாது. நான் ஏதேனும் ஆலோசனை கூற விரும்பினால் அது, நிகழ்ச்சிகளின் போது விருந்தினர்களுக்காக கூடுதல் செயல்பாடுகள் இருந்திருக்க வேண்டும் என்பதாகும். அத்துடன், விருந்தினர்களாக இருக்கின்ற பெண்கள் ஹிஜாப் அணிந்திருக்க வேண்டும் என்ற கட்டுப்பாடும் இருந்திருக்கக் கூடாது.

இவ்வாறு கட்டுப்பாடு விதிப்பது கிடையாதுதான். அல்லது அவருக்கு தப்பெண்ணம் ஏற்பட்டிருக்கலாம் அல்லது ஏதேனும் பணியாளர் வெறுமனே அவரிடம் கூறியிருக்கலாம். பொதுவாக என்னை பொறுத்தவரை இவ்வாறு நாம் கூறுவது கிடையாது. எவ்வாறிருப்பினும், ஹிஜாப் கைவசம் இருக்க வேண்டும்; எவர் விரும்புகிறாரோ அவர் அணிந்து கொள்ள வேண்டும் என்று அவர் கூறி இருக்கிறார். ஆனால், ஆடையைப் பொறுத்த வரை அது வெட்கமிக்கதாக இருக்க வேண்டும் என்றே நாம் கூறுகின்றோம்.

கோஸ்டாரிக்காவிலிருந்து வந்திருந்த லோரீனா வேலா( Lorena Villa Lobos) என்ற விருந்தினருக்கு கோஸ்டாரிக்காவில் முஸ்லிம் இயக்கங்களுடன் தொடர்பு இருந்து வருவதுண்டு. ஆனால் அவர்களிடத்தில் பெண்களுடைய எந்தவிதமான பங்களிப்பும் தென்படுவது கிடையாது. ஆண்கள் மட்டுமே மார்க்கத்தின் பிரதிநிதிகளாக இருப்பார்கள். அவர்கள் மார்க்கத்தின் குறிப்பான பொறுப்புகளில் இருப்பார்கள். ஆனால் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்ட பிறகு எனக்கு வியப்பும் ஏற்பட்டது; மகிழ்ச்சியும் ஏற்பட்டது. ஏனெனில், அஹ்மதிய்யா ஜமாஅத்தில் பெண்களுக்கு, ஆண்களுக்கு இணையான அந்தஸ்து கொடுக்கப்படுகின்றது.

அடுத்த நாள் இவர் பெண்களுடைய மாநாட்டுத் திடலுக்கு சென்றபோது பெண்களுடைய ஒழுக்கம் மற்றும் தூய்மை ஆகியவற்றின் தரம் மிகவும் சிறந்ததாக தென்பட்டது. அவர் கூறுகின்றார்:

அஹ்மதிய்யா ஜமாஅத் உலகில் அமைதி மற்றும் சமாதானத்தை நிலைநாட்டுவதற்காகவும், மார்க்கங்களுக்கு இடையிலான கலந்துரையாடல்களுக்காகவும் பணியாற்றிக் கொண்டிருக்கின்றது என்று எனக்கு கூறப்பட்ட போது ஆரம்பத்தில் இவை அனைத்தும் வெறும் பேச்சு அளவில் வரை மட்டுமே ஆகும் என்று நான் நினைத்தேன். ஆனால் மாநாட்டில் கலந்து கொண்டு என் அனுபவத்தால் கண்டபோது ஜமாஅத் மற்றவர்களுக்கு எதை கூறுகிறதோ அதன்படி சுயமே செயல்படுகிறது என்று உண்மைப்படுத்தினேன். ஜமாஅத்தினுடைய கொள்கைகளும் செயல்களும் ஒன்றுபோல் இருக்கின்றன.

போரன்டியிலிருந்து ஹாதூ நிகீமானா போன்தேன் ஸாஹிப் எனும் ஒரு விருந்தினர் வந்திருந்தார். இவர் தேசிய ஒற்றுமை மற்றும் சமுதாய அமைச்சகத்தின் செகரட்டரியும், போரன்டியின் மனித உரிமை செயலரும் ஆவார். தம் கருத்தை வெளிப்படுத்தியவாறு அவர் கூறுகிறார்:

ஏர்போர்ட்டில் இருந்து தங்குமிடம் வரையிலும் மிகவும் சிறப்பான முறையில் நான் வரவேற்கப்பட்டேன். இளைஞர்களாக இருந்த தன்னார்வலர்கள் எனக்கு நல்வரவு கூறினர். தொடர்ச்சியாக மிகச் சிறப்பான முறையில் நான் விருந்தோம்பல் செய்யப்பட்டேன். மூன்று நாட்களும் அஹ்மதிய்யா ஜமாஅத் சார்பாக தன்னலமற்ற முறையில் நேசத்துடன் பாதுகாக்கப்பட்டு மத இன, நிற, குல பாகுபாடின்றி எப்படிப்பட்ட விருந்தோம்பல் செய்யப்பட்டதோ அதை நான் எப்பொழுதும் நினைவில் வைத்திருப்பேன். எனது கொள்கை எவ்வளவோ மாறுபட்டதாக உள்ளது. ஆயினும், நாம் அனைவரும் அல்லாஹ்வுடைய படைப்பினங்கள் ஆவோம்; அவன் நம் அனைவரையும் நேசிக்கின்றான். நமது ரத்தம் ஒன்றுதான். மாநாட்டின் சொற்பொழிவுகள் இஸ்லாமிய போதனைகளின் செல்வத்தால் நிறைந்து காணப்பட்டன. அத்துடன் (அவற்றில்) அஹ்மதிய்யா சமூக கொள்கைகளை குறித்து சில மக்களுடைய தவறான விளக்கங்களுக்கு எதிராக தெளிவு வழங்கப்படுகிறது அல்லது அதற்கான பதில்கள் அளிக்கப்படுகின்றன. உலகம் முழுவதிலும் கிடைத்துள்ள வெற்றிகளை குறித்து தங்களுடைய அறிக்கை எடுத்துரைத்தது. அதில் தாங்கள் தேவைகளை உடைய குறிப்பிடத்தக்க மக்களுக்கு தொண்டு செய்வதற்காக திட்டங்களை தீட்டி அவர்களுக்கு உதவி செய்வதில் உங்களுடைய பங்களிப்பை வழங்கி வருகிறீர்கள்; எனது நாடான போரன்டியில் அந்த தொண்டுகளுக்கு நான் சாட்சியாக இருக்கின்றேன். இவ்வளவு பெரிய மாநாடு எந்த ஒரு மனித முயற்சியும் கிடையாது. இது முழுக்க முழுக்க அல்லாஹ்வுடைய விவகாரமாகும். நீங்கள் எதையெல்லாம் செய்கிறீர்களோ அவற்றின் மீது எப்பொழுதும் அல்லாஹ்வின் கை உள்ளது என்பதற்கு சாட்சி கூறும் வகையில் இது விரிவான முழுமையான அடையாளமாக உள்ளது.

அல்லாஹ் உங்களை பாதுகாத்து வருவானாக! என்று துஆவும் செய்துள்ளார்.

ஐஸ்லேண்டிலிருந்து வருகை தந்துள்ள சுலைமான் பாஃ ஸாஹிப் என்பவர்

அஹ்மதி அல்லாத விருந்தினர் ஆவார். அவர் பிறப்பால் கேம்பியன் ஆவார். அவர் கூறுகின்றார்: மாநாட்டில் கலந்து கொண்டதால் ஜமாஅத்தைப் பற்றிய அறிவு அதிகரித்தது. பல்வேறு கண்காட்சிகளை கண்ட பிறகு ஜமாஅத் உலகம் முழுவதிலும் என்ன செய்து கொண்டிருக்கின்றது?என்பதை நான் அறிந்து கொண்டேன். ஜமாஅத் கல்வியைப் பெறுவதற்காகவும் கல்வியைப் பரப்புவதற்காகவும் செய்கின்ற முயற்சிகள் என் மீது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தின.43 ஆயிரம் நபர்கள் கலந்து கொண்ட போதிலும் திரைக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆண்கள், பெண்கள் தத்தமது இடத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். நான் பல இஸ்லாமிய மாநாடுகளிலும், நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டுள்ளேன். அங்கு சில ஆயிரம் மக்கள்தான் இருந்தார்கள். ஆனால், ஆண்களும், பெண்களும் கலந்திருந்தார்கள். மாநாட்டில் இவ்வளவு பெரும் எண்ணிக்கை இருந்தபோதிலும் திரை கவனத்தில் கொள்ளப்பட்டிருந்தது. இது ஒரு சாதாரண விஷயம் கிடையாது.

இதுவும் கூட ஒரு மௌனமான தப்லீஃக் ஆகும். அம்மக்களுக்கு நம்முடைய செயலினால் (இந்த தப்லீஃக்) ஏற்படுகின்றது.

அவர் கூறுகிறார்: இதற்காக ஜமாஅத்தை பாராட்ட வேண்டும். மாநாட்டின் ஏற்பாடுகள், அமைப்புகள் ஆகியவை மிகவும் உயர்வானதாக இருந்தன. மக்கள் ஒருவர் மற்றவருடன் கண்ணியத்துடன் பழகினர். பணியாளர்கள் மகிழ்ச்சியுடன் பணியாற்றிக் கொண்டிருந்தனர். மென்மையான முறையில் வேலை நடந்து கொண்டிருந்தது. இவை அனைத்தும் சில நாட்களுடைய ஆயத்தங்களுடைய விளைவு கிடையாது. மாறாக ஒரு நீண்ட கால ஆயத்தங்கள் செய்யப்பட்டு கொண்டிருந்தன. நான் தங்க வைக்கப்பட்டிருந்த இடம் ஜாமிஆ ஆகும்.அங்கு படுக்கை விரிப்புகள் வைக்கப்பட்டிருந்தன. நாங்கள் அனைவரும் அங்கு உறங்கினோம். எவ்வித பாகுபாடும் இருக்கவில்லை. அனைத்து விருந்தினர்களும் ஒரே மாதிரியாகத் தான் நடத்தப்பட்டனர்.

பிறகு அவர் ஓர் ஆலோசனை எடுத்து வைத்துள்ளார். ஏற்பாட்டை மேம்படுத்துவதற்காக கூறி இருக்கலாம். அவர் கூறுகிறார்: மாநாட்டுத் திடலில் ஏசிக்கான ஏற்பாடு இருந்தது. ஆனால் வெப்பத்தின் கடுமை அவ்வாறிருந்தும் உணரப்பட்டுக் கொண்டிருந்தது. காற்றோட்டத்தின் குறை இருந்தது. அதன் காரணமாக தூக்கம் வந்து கொண்டிருந்தது. எனக்கு மட்டும் தான் தூக்கம் வருகிறதோ என்று நான் நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் வலப்பக்கமும், இடப்பக்கமும் நான் பார்த்தபோது மற்ற மக்களும் தூங்குவதை நான் கண்டேன். ஆகவே புத்துணர்ச்சியுடன் இருப்பதற்கு காற்றோட்டமான அமைப்பை ஏற்படுத்துவது அவசியமாகும்.

அர்ஜென்டைனுடைய முபல்லிஃக் எழுதுகிறார்: மெரீனா பிளாஸா ஸாஹிபா என்பவர் யூ.கே வில் அர்ஜென்டைனுடைய தூதுவராக இருக்கின்றார். முதல் முறையாக அவர் மாநாட்டில் கலந்து கொண்டார். மாநாட்டின் சூழ்நிலை மற்றும் நிகழ்ச்சிகளால் எந்த அளவு தாக்கத்திற்கு ஆளானார் என்றால் அவர் மாநாட்டிற்கு பிறகு அர்ஜென்டைனுடைய தூதரகத்தில் முறையாக ஒரு வரவேற்பு நிகழ்ச்சிக்கான ஏற்பாடு செய்தார். அதில் அவர் லத்தீன் அமெரிக்காவிலிருந்து மாநாட்டில் கலந்து கொண்ட ஜமாஅத் அல்லாத விருந்தினர்களுக்கு அழைப்பு கொடுத்தார். அந்த வரவேற்பு நிகழ்ச்சியின்போது அர்ஜென்டைனுடைய தூதுவர் குறிப்பாக ஜமாஅத் அல்லாத அரசாங்க விருந்தினர்களுக்கு அவர்கள் மாநாட்டில் கலந்து கொண்டதற்காக நன்றி தெரிவிப்பதாக கூறினார். இவ்வாறு ஜமாஅத்தின் செய்தியை ஊக்குவிப்பதில் தம் பங்களிப்பை வழங்கினார்.

அவர் கூறினார்: பொதுவாக மார்க்க அமைப்புகள் பதவி வகிப்பவர்களுக்கு அல்லது அரசியல்வாதிகளுக்கு வெளிப்புற நிகழ்ச்சிகளில் மட்டுமே குறிப்பாக அழைப்பு கொடுப்பார்கள். நிகழ்ச்சியின் குறிப்பிட்ட பகுதியில் மட்டுமே அழைப்பு கொடுத்த பிறகு வழியனுப்பி வைக்கப்பட்டு விடுவார்கள். ஆனால் இதற்கு நேர் எதிராக தங்களுடைய ஜமாஅத் மற்றும் ஜமாஅத் அல்லாத விருந்தினர்களாக இருந்த எங்கள் அனைவரிடத்திலும் எந்த மறைவையும் மேற்கொள்ளவில்லை. இது மிகவும் அசாதாரணமான புகழத்தக்க விஷயமாக இருந்தது. உங்களிடத்தில் எவ்வித மறைமுக நோக்கமும் இல்லை என்பதை இது குறிக்கின்றது. மாறாக உங்களுடைய அனைத்து போதனைகளும் வெளிப்படையானவை என்பதை இது காட்டுகிறது. நீங்கள் எந்த போதனைகளை அந்நியர்களுக்கு முன்னால் எடுத்து வைக்கிறீர்களோ அது உங்களுடைய உட்புற போதனை மற்றும் அஜெண்டாவுக்கு முற்றிலும் பொருத்தமானதாக உள்ளது.

டோக்கேலேனீ ஸாஹிபா என்ற செய்தித்தாள் பதிப்பாசிரியை பிரேசிலில் இருந்து கலந்து கொண்டார். அவர் கூறுகின்றார்: நான் இந்த மகத்துவ மிக்க மாநாட்டினால் எல்லா வகையிலும் மிகுந்த தாக்கத்திற்கு ஆளாகி இருக்கின்றேன். குறிப்பாக இதனுடைய கட்டமைப்பு, பல்வேறு நாடுகளில் இருந்து பெரும் எண்ணிக்கையில் மக்கள் கலந்து கொண்டது, அவர்கள் பரஸ்பரம் பெரும் அன்பு நேசத்துடன் இருந்தது மற்றும் அனைத்து ஏற்பாடுகள்; இவை இந்த மாநாடு எல்லா வகையிலும் வெற்றிகரமாக இருந்தது என்பதை உறுதிப்படுத்தின. அமைதி, ஒற்றுமை, நேசம் ஆகிய சூழலால் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. ஜமாஅத்தின் இமாம் அவர்களின் ஞானமிகு விஷயங்கள் என் உள்ளத்தை தொட்டன. அவை எனது சிந்தனையை நல்ல விஷயங்களுக்காக மட்டுமே திறந்தன. கலீஃபா அவர்களின் கூற்றுகளில் வெளிப்படையான சொற்கள் மட்டுமின்றி அவை உள்ளத்தில் இருந்து வெளிப்பட்ட தூய விஷயங்களாக தோன்றின. இந்த மாநாட்டின் போது அன்பு மற்றும் கண்ணியம் எல்லா நொடியிலும் உணரப்பட்டது. தன்னார்வலர்கள் எந்த அளவு மனமுவந்து பணியாற்றினார்கள் என்றால் அவை நிச்சயமாக உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகவும், புகழத்தகுந்தவையாகவும் இருந்தன.

பிரேசிலில் இருந்து ஒரு பத்திரிகையாளர் வந்திருந்தார். அவர் கூறுகிறார்: இது ஓர் அசாதாரணமான மாநாடாக இருந்தது. எனது உள்ளத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்காக இருந்த கண்ணியம் மற்றும் நலம் விரும்புதல் ஆகியவை மாநாட்டிற்கு பிறகு இன்னும் அதிகரித்தது. தன்னார்வலர்கள் தன்னலமற்ற முறையில் தம் நேரத்தையும், தமது வாகனங்களையும் தமது தொண்டுகளையும் விருந்தினர்களுக்காக அர்ப்பணித்தவாறு தொண்டு செய்தது எனது கவனத்தை ஈர்த்தது. இது மிகவும் அன்பான விஷயமாகும்.

இத்தாலி நாட்டின் யூனிவர்ஸிட்டி ஆஃப் ஃபோலரன்ஸ்- இன் பேராசிரியர் ரொபர்டோ காத்தாலோனோ என்பவர் மாநாட்டில் கலந்து கொண்டார். அவர் கூறுகின்றார்: நான் இந்த நிகழ்ச்சியினால் வியப்பிற்கு ஆளாகியுள்ளேன். இந்த மாநாடு உலகம் முழுவதிலும் உள்ள சமுதாயங்களிலிருந்து பல்லாயிரக்கணக்கான பிரதிநிதிகளை ஒன்று திரட்டி உள்ளது. இது அஹ்மதியா ஜமாஅத்தின் குறிப்பிடத்தக்க ஒற்றுமையை வெளிப்படுத்துகின்றது. மாநாட்டில் ஓர் ஆன்மிக சூழலை உணரமுடியும். ஜமாஅத்தின் இமாம் அவர்கள் ஏதாவது பேசினால் கேட்கக் கூடியவர்களிடத்தில் ஒரு முழுமையான அமைதியும், கவனமும் ஏற்படுவது வியப்பை ஏற்படுத்துகின்றது. ஓர் ஆழமான ஆன்மிக சூழல் உருவாகி விடுகின்றது. தன்னார்வத் தொண்டர்களின் ஈடுபாடும் கூட எந்த அளவு தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்றால் ஆயிரக்கணக்கான தன்னார்வத் தொண்டர்களில் சிறு பிள்ளைகளும் இருக்கின்றார்கள்.மிக உழைப்புடன் பணியாற்றுகின்றனர். மாநாட்டில் நினைவு கூறத் தகுந்த குறிப்பான தருணம் ஒன்று உள்ளது. அது உலகளாவிய பைஅத் நிகழ்ச்சியாகும். அதில் கலீஃபாவின் கையில் பைஅத் செய்யப்படுகின்றது. இந்த தூய மகத்துவ மிக்க நிகழ்ச்சி 40000 மக்களை ஒரே கையில் இணைத்து விடுகின்றது. அது அவர்களின் ஒருங்கிணைந்த ஈமான் மற்றும் தொடர்பின் ஒரு வலிமையான சான்றாக உள்ளது.

அவர் கூறுகின்றார்: குறிப்பாக பாகிஸ்தானில் ஜமாஅத்தின் மீது செய்யப்படுகின்ற கொடுமைகள், கஷ்டங்கள் தொடர்பாக எனது அறிவு அதிகரித்தது. இந்த கஷ்டங்கள் மற்றும் சோதனைகள் இருந்தபோதிலும் வெறுப்பை காட்டக் கூடாது என்ற நடவடிக்கை என்னை தாக்கத்திற்கு ஆளாக்கியது. அது உங்களுடைய ஈமானுக்கு ஓர் உண்மையான சாட்சியை எடுத்து வைக்கின்றது.

ஐஸ்லேண்டிலிருந்து மேரி ஸாஹிபா ஒரு விருந்தினர் வருகை தந்திருந்தார்கள். அவர்கள் அங்குள்ள வுமன்ஸ் அஃபேர்ஸ் மற்றும் ஃபேமிலி கமிஷனின் உறுப்பினரும் ஆவார்கள்.அவர்கள் கூறுகின்றார்கள்: முதல் முறையாக இவ்வளவு பெரிய நிகழ்ச்சியில் நான் கலந்து கொண்டேன். அங்கு நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளைச் சார்ந்த மக்கள் இருந்தார்கள். பல்வேறு சமுதாயங்களைச் சார்ந்த மக்களும் கலந்து கொண்டார்கள். ஏறக்குறைய 44 ஆயிரம் பேர் இந்த மாநாட்டில் கலந்து கொண்டார்கள். என்னைப் பொறுத்தவரையில் ரோடர்கஸ் தீவுகளின் குடிமக்கள் அனைவரும் ஒன்று கூடுவதற்கு சமமானதாக இருந்தது. எனது உள்ளத்தை உருக்கிய விஷயம் என்னவென்றால், அது ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்ட மக்கள் இந்த அளவு ஒழுங்கமைப்பான முறையில் அமர்ந்திருந்ததுதான். ஒவ்வொருவரும் சிரித்த முகத்துடன் மற்றவருக்கு ஸலாம் கூறிக் கொண்டிருந்தார். இது புகழத்தக்க விஷயமாகும். ஜமாஅத்தின் இமாம் அவர்கள் பெண்களுக்கு ஆற்றிய சொற்பொழிவும் பொருள் வாய்ந்ததாக இருந்தது. அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தில் பெண்களுடைய பங்களிப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று எனக்கு தெரிய வந்தது. இந்த சொற்பொழிவு எனது கொள்கையிலும் நேர்மறையான மாற்றங்களை கொண்டு வரும் என்று

எனக்கு நம்பிக்கை உள்ளது. நான் இந்த மாநாட்டில் எவ்வளவோ விஷயங்களை கற்றுக் கொண்டேன். அது நிச்சயமாக என்னிடத்திலும் என்னை சுற்றியுள்ள மக்களிடத்திலும் நேர்மறையான மாற்றங்களை கொண்டு வரும். நான் கடந்த காலத்தில் பல மார்க்க நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டுள்ளேன். ஆனால், எனது வாழ்வில் கொஞ்சம் ஆன்மிக ரீதியாக குறைபாடு இருப்பதை எப்பொழுதும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நான் உணர்ந்து வந்தேன். ஆனால் மாநாடு எப்படிப்பட்ட நிகழ்ச்சியாக இருந்தது என்றால் அதன் காரணமாக எனது வாழ்வில் எந்த குறைபாடு இருந்ததோ அது இப்போது நீங்கிவிட்டது.

ஆன்மிக ரீதியாக தங்களிடத்தில் குறைபாடு இருந்ததை உணர்ந்தாகவும் இங்கு எங்களுக்கு சிறந்த சூழல் கிடைத்தது என்றும் பல மக்கள் வெளிப்படுத்தி இருக்கிறார்கள்.

டீமூவ் ஆன்டர்ஸன் ஹோய்ஸ் ஸாஹிபா என்ற ஒரு பெண்மணி தன்ஸானியா நாட்டின் சார்பாக ஐ.நா ஜெனீவாவில் தூதுவராக இருக்கின்றார்கள். அவர் கூறுகின்றார்கள்:

நான் இங்கு வந்து அன்பு மற்றும் புன்னகையை கண்டேன். அந்நாட்களில் எங்கேயும் வெறுப்பு காண கிடைக்கவில்லை. பெண்களுடைய மாநாட்டு நிகழ்ச்சிகள் மிகவும் அறிவார்ந்தவையாகவும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவையாகவும் இருந்தன. நான் மாநாட்டில் கண்காட்சிகளை கண்டேன்.அவையும் மிக அழகானதாக இருந்தன. அவற்றில் ஜமாஅத்தின் தோற்றுனர் மற்றும் சான்றோர்களின் மிக அழகான அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. இந்த உறுதியான ஜமாஅத்தின் தோற்றுனர் மற்றும் வீரர்களின் வரலாறு அழகிய முறையில் எடுத்து வைக்கப்பட்டிருந்தது. அஹ்மதிய்யா ஜமாஅத் பல மக்களுடைய வாழ்க்கையை வெளிப்படையான முறையில் மாற்றி இருந்தது. அதில் என் அன்பிற்குரிய நாடான தன்ஸானியாவும் உள்ளது. இந்த மாநாடு மனிதகுல அனுதாபம் மற்றும் நேசத்துடன் வாழ்வை வாழ்வதற்கும், எவ்வித வெறுப்பும் இன்றி மதிப்பளிப்பதற்கும் வாய்ப்பை வழங்கியது.

ஸிராலியோனைச் சார்ந்த ஜஸ்டிஸ் ஐவன் சீஸே என்ற விருந்தினர் ஒருவர் கூறுகிறார்: ஆண்டு மாநாட்டின் மூன்று நாட்களும் அமைதி, ஆன்மிகம், முன்னேற்றம் மற்றும் உலக ஒற்றுமை ஆகியவற்றின் நாட்களாக இருந்தன. மாநாட்டின் ஏற்பாடுகள் மிகவும் மேலானதாக இருந்தது. எவ்வித நிற இன, பாகுபாடும் இருக்கவில்லை. அனைத்து மக்களும் ஒருவர் மற்றவருடன் இணைந்து பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவரும் தமக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த டியூட்டிகளை நிறைவேற்றிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் சிறிய பிள்ளைகளாக இருந்தாலும் சரி; அல்லது வேறு எவராக இருந்தாலும் சரி; நான் இதைக் கண்டு மிகுந்த வியப்பிற்கு ஆளானேன். சொற்பொழிவாளர்களும் சமுதாய அறிஞர்களும் ஆழிய அகப்பார்வையுடன் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய தூதுச் செய்திகளை வழங்கிக் கொண்டிருந்தார்கள். அவை ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் குடிகொண்டது. அமைதி, ஒற்றுமை மற்றும் பரஸ்பர புரிதல் ஆகியவற்றை வலியுறுத்திய போதனைகள் குறிப்பாக என் மீது மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தின. எண்ணற்ற செயல்பாடுகளும், கண்காட்சிகளும் இருந்தன. அவை மாநாட்டின் அழகை மெருகூட்டின. கல்வி தொடர்பான கண்காட்சிகள் நல்ல விதத்தில் எடுத்து வைக்கப்பட்டிருந்தன. அவை வரலாறு மற்றும் கலாச்சாரம் தொடர்பான அகப்பார்வையை வழங்கிக் கொண்டிருந்தன.

பிறகு அவர் கூறுகிறார்: பல வகையான பின்னணியை கொண்ட மக்களை சந்திப்பதற்கும், பேசுவதற்கும் எண்ணற்ற வாய்ப்புகள் எனக்கு கிடைத்தன. அதன் மூலமாக ஒற்றுமை மற்றும் சகோதரத்துவத்தின் உணர்வுகள் மேலோங்கின.

பிறகு அவர் கூறுகிறார்: எனக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்த தருணமாக இருந்தது. ஜமாஅத்தின் இமாம் அவர்கள் மனிதகுல அனுதாபம் மற்றும் தொண்டின் முக்கியத்துவம் குறித்து கவனமூட்டிய தலைமையுரையாகும். சோசியல் மீடியா, எலக்ட்ரானிக் நெட்வொர்க் ஆகியவற்றுக்கிடையில் தம் குழந்தைகளுக்காக பெற்றோர்களின் பங்களிப்பைக் குறித்தும், பிள்ளைகளை கண்காணிக்காமல் இருத்தலின் காரணமாக குழந்தைகள் மீது ஏற்படக் கூடிய எதிர்மறையான தாக்கங்களை குறித்தும் கூறப்பட்டது. பெற்றோர்களாகிய நமக்கு இது ஒரு கலங்கரை விளக்காகவும், தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகவும் உள்ளது.

அவர் கூறுகிறார்: ஆண்டு மாநாட்டின் ஏற்பாடுகள், சொற்பொழிவுகள் மற்றும் ஜமாஅத்தினர்களின் தொண்டுகள் எனது எதிர்பார்ப்புகளை விட எவ்வளவோ மேலானதாக இருந்தது.

கஸகிஸ்தானிலிருந்து குல் சாயிரா(ன்) மேங்காலி ஸாஹிபா என்ற விருந்தினர் வந்திருந்தார். அவர் கூறுகின்றார்: நான் முதன்முறையாக இவ்வளவு மகத்துவ மிக்க மாநாட்டில் கலந்து கொண்டுள்ளேன். முன்னாள் அரசியல்வாதி என்ற வகையில் இவ்வளவு விரிவான ஏற்பாடுகளுக்கு எந்த அளவு செலவீனங்கள் ஏற்பட்டிருக்கும் என்றும், இவ்வளவு உயரிய தரத்திலான ஏற்பாடுகளுக்காக எந்த அளவு திட்டமிடல்களும் எந்த அளவு மக்களுடைய களைப்படையாத உழைப்புகளும் இருக்கும் என்று எனக்கு அனுபவத்தில் தெரிய முடிகிறது. அனைத்து பணியாளர்களும் ஒவ்வொரு துறையிலும் மிகவும் உத்வேகத்துடன், மகிழ்ச்சியுடன் பணியாற்றிக் கொண்டிருந்தது என்னை மிகவும் தாக்கத்திற்குள்ளாக்கியது. ஒவ்வொரு பணியாளரும் களைப்படையாமல் உழைத்தபோதிலும் விருந்தினர்களுடன் அன்பு மற்றும் கண்ணியத்துடனும் நடந்து கொண்டார்.

அவர் கூறுகிறார்: எந்த விஷயம் என்னை அதிக தாக்கத்திற்கு ஆளாக்கியது என்றால், கலீஃபா அவர்களின் சொற்பொழிவுகள் ஆகும். வெளிப்படையில் அந்த சொற்பொழிவுகளில் தினசரி வாழ்க்கையில் பயன்படக் கூடிய ஒழுக்கங்களை பற்றிய பேச்சு இருந்தது. ஆனால், அவற்றுக்கு பின்னால் மிகவும் பரந்த, ஆழமான கருத்து இருந்தது. எனக்கு மிகவும் பிடித்த விஷயமாக இருந்ததென்னவென்றால், குழந்தைகளின் தர்பிய்யத்தில் சோஷியல் மீடியா உடைய தீய தாக்கங்களை குறித்து கலீஃபா அவர்கள் மிகவும் தெளிவாக எடுத்துக் கூறியதாகும். இவற்றிலிருந்து நான் எவ்வளவோ விஷயங்களை கற்றுக் கொண்டேன். மேலும் இவற்றை எனது வாழ்வில் செயல்படுத்துவதற்கு நான் முயற்சி செய்வேன். நான் எனது பேரன் பேத்திகளுடன் பேசும்போது, நாம் நம் வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு முயற்சிக்கும் போது நம் ஒழுக்கங்களை ஒருபோதும் மறந்துவிடக் கூடாது என்று அவர்களுக்கு புரியவைப்பேன்.

அப்பெண்மணி எந்த அளவு தாக்கத்திற்கு ஆளாகி இருந்தார் என்றால் இந்தமுறை நான் விருந்தாளியாக வந்துள்ளேன். ஆனால் வெகு விரைவில் நான் இந்த ஜமாஅத்தில் இணைந்து விடுவேன் என்று எனக்கு முழுமையான நம்பிக்கை இருக்கின்றது. ஏனெனில் நான் இந்த மாநாட்டில் எந்த விஷயங்களை கேட்டேனோ அவை எனக்கு மிகவும் பிடித்தமானவையாக இருக்கின்றன என்று கூறியுள்ளார்.

பெலீசிலிருந்து காஷ் சங்கோஃபா ஸாஹிப் எனும் விருந்தினர் வந்திருந்தார். அவர் கூறுகிறார்: உண்மையான இஸ்லாம் இல்லை என்று ஒருவர் எவ்வாறு மறுக்க இயலும். எனது அனைத்து சந்தேகங்களுக்கும். ஐயங்களுக்கும், கேள்விகளுக்கும் பதில் கிடைத்து விட்டது. அஹ்மதிய்யா ஜமாஅத்தில் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் எந்த அளவு நேசிக்கப்படுகிறார்கள் என்று நான் பார்க்கிறேன். அஹ்மதிய்யத் ஒரு மிகப் பெரும் உறுதியான மரமாகும். அதில் கனி தரும் பல கிளைகள் உள்ளன.

ஸ்பெயினைச் சார்ந்த அமாலியா எனும் விருந்தினர் வந்திருந்தார். அவர் யூனிவர்ஸிட்டி ஆஃப் குர்தபாவைச் சார்ந்த பெண்மணி ஆவார். அவர் எழுதுகின்றார்: உளவியலில் பேராசிரியை என்ற வகையில் நான் உங்களுடைய அனுபவங்களை அறிவதில் ஆர்வம் வைத்திருந்தேன். நான் அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு அந்த தருணங்களை கண்டேன். அவற்றை எனது மூளையில் பாதுகாத்துக் கொண்டேன். அவை எனது நினைவுகளின் பகுதியாக இருக்கும். அவற்றை நான் மிகவும் நேசத்துடன் நினைவு கூர்வேன். இந்த மாநாட்டின் பன்முகத்தன்மை, இதன் விசாலம், ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும் உணரப்படும். இதன் அமைதி மற்றும் நல்லிணக்கம் ஆகியவை என்னிடத்தில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தின.

கோஸோ பல்கலைக்கழகத்தின் இயற்பியல் பேராசிரியரான ஆர்பக் ஸிக்ராஜ் என்பவர் கூறுகிறார்: நான் பிரிட்டன் ஆண்டு மாநாட்டில் முதல் முறையாக கலந்து கொண்டேன். பணியாளர்களுக்கும், விருந்தினர்களுக்கும் இடையில் வெளிப்படையான முறையில் அன்பு நேசத்தின் உணர்வுகள் ஒருவர் மற்றவருக்காக தென்பட்டுக் கொண்டிருந்தன. மலர்ந்த முகத்துடன் எல்லா புறமும் அஸ்ஸலாமு அலைக்கும் உடைய ஓசை கேட்டுக் கொண்டிருந்தது. இவ்வாறான சூழலை சொர்க்கத்துடன் ஒப்பிட்டு கூறலாம். இவ்வளவு பெரும் கூட்டத்தில் இவ்வாறான சூழலை உருவாக்க முடியும் என்றால் பிறகு முழு உலகிலும் இவ்வாறான சூழலை ஏற்படுத்துவது சாத்தியமற்ற விஷயம் கிடையாது. ஆனால் அஹ்மதிய்யா ஜமாஅத்

*திருக்குர்ஆனிலிருந்து...*

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

மட்டும்தான் இந்தப் பணியை செய்து கொண்டிருக்கின்றது. என்னிடத்தில் அதிக தாக்கத்தை ஏற்படுத்திய விஷயம் என்னவென்றால், பணியாளர்கள் ஏதேனும் கட்டாயத்தின் காரணமாக மறுத்தாலும் கூட விருந்தினார்கள் எல்லா வகையிலும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் என்பதற்காக உடனடியாக அதற்கான தீர்வையும் எடுத்து வைத்துவிடுகின்றார்கள்.

அவர் கூறுகின்றார்: பல்வேறு சமுதாயங்களைச் சார்ந்த மக்கள் ஒரே சரடில் இணைக்கப்பட்ட முத்துக்களைப் போன்று ஒரே வகையில் எவ்வாறு ஒன்றிணைகிறார்கள் என்று பைஅத் நிகழ்ச்சியைக் கண்டு நான் மிகவும் வியப்படைந்து விட்டேன்.

உருகுவேயிலிருந்து வந்திருந்த ஜமாஅத் அல்லாத பெண் பத்திரிகையாளர் ஒருவர் கூறுகிறார்: மாநாட்டில் கலந்து கொள்வதற்கு முன்பு பல எதிர்பார்ப்புகளும் பல பாரபட்சங்களும் இருந்தன. உருகுவேவில் என்னுடைய ஆராய்ச்சி திட்டத்திற்காக இஸ்லாத்தை அருகில் சென்று அறிய வேண்டியது இருந்தது. குறிப்பாக உங்கள் சமூகம் செயல்படுவது போன்று அதன் பணிகளை அறிவது அவசியமாக இருந்தது. முதல் நாள் சொற்பொழிவில் கலீஃபா அவர்கள் விருந்தோம்பலை குறித்து பேசினார்கள். குறிப்பாக அது தாக்கத்தை ஏற்படுத்தியது. விருந்தினர் என்ற முறையில் நாங்கள் ஏதேனும் உலகளாவிய மார்க்க செய்தியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். ஆனால், அந்த தூதுச் செய்தி (அஹ்மதிய்யா) சமூகத்தை நோக்கி கூறப்பட்டிருந்தது. இறைவனுடைய மகத்துவம் எடுத்துக் கூறப்பட்ட, தொடர்ச்சியாக இறை புகழ் கூறப்பட்ட சூழலில் மிகவும் நிம்மதியை உணர்ந்தேன்.

பிறகு கூறுகிறார்: நான் அஹ்மதிய்யா முஸ்லிம் சமூகத்திற்குள் பல்வேறு கலாச்சாரங்களை பற்றி எவ்வளவோ கற்றுக் கொண்டேன். அதன் காரணமாக என்னுடைய அதிகமான ஆகுமற்ற சார்புத் தன்மைகள் நீங்கி விட்டன.

பிறகு கூறுகிறார்: பெண்கள் பகுதியில் சிறிது ரெக்கார்ட் செய்வதற்கு எனக்கு அனுமதி இருக்கவில்லை. இதில் எவ்வித ஆபத்தோ, தடையோ இல்லை என்று நான் கருதுகிறேன்.

புகைப்படம் எடுப்பது அவருடைய நோக்கமாக இருந்தது என்றால் அனுமதி கொடுக்காதது நல்லதாகும். அது அல்லாமல் ரெக்கார்ட் செய்ய விரும்பி இருந்தார் என்றால் பிறகுள்ள நாட்களிலும் அவர் விரும்புகின்ற ரெக்காட்டிங்- ஐ வாங்கிச் சென்றிருக்கலாம். எவ்வாறிருப்பினும், அங்கிருந்து வந்திருக்கின்ற முரப்பி இதை அவருக்கு புரிய வைக்க வேண்டும்.

பிறகு அவர் கூறுகிறார்: அனுமதி கொடுக்கப்பட்டிருந்தால் அதில் எந்த தவறும் இருந்திருக்காது. அனுமதி கொடுக்கப்பட்டிருந்தால் நாங்கள் எங்களது நாட்டில் பரப்புவதற்கு சிறந்த உள்ளடக்கத்தை உருவாக்கியிருப்போம். ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டது எனது ஆன்மிக வாழ்வில் குறிப்பான தாக்கத்தை ஏற்படுத்தியது. எல்லாவற்றையும் விட எனக்கு மிகுந்த நினைவுகூரத்தக்க தருணம் என்னவென்றால், ஆண்கள் அல்லாஹ்விடத்தில் துஆ செய்யும்போது அழுததாகும். பத்திரிகையாளர்கள் நிகழ்ச்சியை சிறந்த முறையில் கவரேஜ் செய்யும் வகையில் அவர்கள் கலந்து கொள்ளும் ஏற்பாட்டை மேம்படுத்தலாம். (அஹ்மதிய்யா) சமூகத்தினுடைய வேலைகளையும், வேலை செய்யக் கூடிய வழிமுறைகளையும் உலகத்திற்கு முன்னால் அதிகமாக பரப்ப வேண்டும் என்பது எனது ஆலோசனையாகும்.

போலந்திலிருந்து இனா பெத்ரூஸ்கா ஸாஹிபா எனும் பெண் விருந்தினர் கலந்து கொண்டார். இவர் கஸ்டம் துறையில் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார். அவர் கூறுகிறார்:

நான் இறைவன் மீது நம்பிக்கை வைத்திருக்கிறேன். என்னை எந்த ஒரு மார்க்கத்தின் அங்கமாகவும் கருதுவது கிடையாது. ஓர் அஹ்மதியின் மூலமாக எனக்கு ஜமாஅத்தை பற்றிய அறிமுகம் கிடைத்தது. அவர் என்னுடன் பணியாற்றி வந்தார். அவர் தம் ஜமாஅத்தின் மீது மிகுந்த பெருமை கொண்டிருக்கிறார்; ஆகவே மற்றவர்களுக்கு அதைப் பற்றி கூறிக் கொள்கிறார் என்று நான் உணர்ந்தேன். எனக்கும் அஹ்மதிய்யா ஜமாஅத்தை குறித்து உள்ளடக்கங்களும், வெப்சைட் உடைய லிங்கில் கிடைத்தது. கொஞ்சம் பயந்து போயிருந்தேன். மாநாட்டில் முதல் நாளில் மாநாட்டு திடலுக்கு செல்வதற்கு எந்த பாதையில் செல்ல வேண்டும் என்று எனக்கு தெரியாமல் இருந்தது. அப்போது நான் கேட்காமலே ஒரு சிறுமி முன் வந்து எனக்கு உதவி செய்தார். அது எனக்கு மிகுந்த வியப்பை ஏற்படுத்தியது. மாநாட்டு திடலை அடைந்தபோது அங்கு பெரும் எண்ணிக்கையில் மக்கள் இருந்தபோதிலும் நான் என்னை பாதுகாப்பில் உணர்ந்தேன்; அந்நியத்தன்மையை உணரவில்லை. மாநாட்டின்போது பல்வேறு வகையான சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. குறிப்பாக ஜமாஅத்தின் இமாம் அவர்களின் சொற்பொழிவுகள் அஹ்மதிய்யா ஜமாஅத்துடனான என் தொடர்புகளை உறுதிப்படுத்தின. மிகவும் நினைவு கூரத்தகுந்த விஷயம் பெண்களுக்கு ஆற்றிய சொற்பொழிவாகும். அதில் சிறுமிகளை எவ்வாறு வளர்ப்பது என்ற வழிகாட்டல் இருந்தது. ஜமாஅத்தின் இமாம் அவர்கள் சொற்பொழிவில் எந்த தார்மீக விஷயங்களை பற்றி குறிப்பிட்டார்களோ அதற்கு நான் முற்றிலும் உடன்படுகிறேன். அந்த அனைத்தும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களும் குறிப்பிடத்தகுந்த விஷயங்களும் ஆகும். அந்த சொற்பொழிவின்போது நான் எனது பிள்ளைகளைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தேன்.

கோஸோ யூனிவர்ஸிட்டி பரிஷ்டீனாவுடைய பேராசிரியர் இருக்கின்றார். அவர் தமது கருத்ததை எடுத்துரைக்கின்றார்:

முதல் முறையாக மாநாட்டில் கலந்து கொண்டுள்ளேன். எல்லா இடத்திலும் அன்பு, நேசம் காண கிடைத்தது. இந்த மாநாடு என்னைப் பொருத்தவரை மிகவும் வெற்றிகரமான மாநாடாக இருந்தது. முக்கியமாக அவற்றின் கண்காட்சிகள். ஜமாஅத்திற்கு உலகெங்கிலும் எழக்கூடிய எதிர்ப்புகளை கேட்டு மிகுந்த துக்கம் ஏற்பட்டது. ஜமாஅத்தின் இமாமுடைய நிறைவுரை இஸ்லாம் அஹ்மதிய்யத்துதான் உண்மையான போதனையாகும் என்பதன் பக்கம் எனக்கு கவனமூட்டியது. என்னுடைய கேள்விகளுக்கான பதில்கள் எனக்கு கிடைத்து விட்டன. நான் கோஸோவிற்குச் சென்று அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கொள்கைகளுக்கு எதிராக பேசக் கூடிய அம்மக்களுக்கு நிச்சயமாக பதில் கொடுப்பேன்.

அடுத்து ஹாலந்தைச் சேர்ந்த மிஸ்டர் சர்க்வான் எனும் விருந்தினர் கூறுகின்றார்:

அஹ்மதிய்யா சமூகத்தின் விருந்தோம்பல் மற்றும் ஆயிரக்கணக்கான நபர்கள் தன்னார்வ தொண்டர்களாக முயற்சி செய்வது ஆகியவற்றால் மிகுந்த தாக்கத்திற்கு உள்ளானேன். அனைவருக்கும் கண்ணியம், நேசம் அமைதி ஆகியவற்றின் சூழ்நிலை இருந்தது.

பிறகு கூறுகிறார்: ஜமாஅத்தினுடைய இமாமுடனும் எனது சந்திப்பு நிகழ்ந்தது. மிகவும் நல்ல அனுபவமாகும். அவர்கள் எங்களை சந்தித்தது மட்டுமின்றி இஸ்லாத்தைக் குறித்து அஹ்மதி மற்றும் முஸ்லிம் அல்லாத மக்களின் கேள்விகளுக்கு பதில் கொடுப்பதற்கும் நேரத்தை ஒதுக்கினார்கள். எனக்கு இதனால் மிகுந்த பயன் ஏற்பட்டது.

அவர் கூறுகிறார்: அவ்விஷயங்கள் எனது உள்ளத்தில் குடிகொண்டு விட்டன. எவ்வித சலிப்பும் இன்றி அவர்கள் பொறுமையுடன் எங்களுடைய பேச்சுக்களை கேட்டார்கள்; எங்களுக்கு பதில் கொடுத்தார்கள்.

நான் எடுத்துக் கூறிய இவ்விஷயங்கள் சில தாக்கங்கள் (மட்டுமே) ஆகும். ஆண்டு மாநாட்டின் விளைவால் நிகழ்ந்த பைஅத்தின் அறிக்கை உள்ளது. கினிபஸாவின் ஒரு கிராமத்தின் தலைவர் மாநாட்டு நிகழ்ச்சிகளை கண்ட பிறகு 85 நபர்களுடன் பைஅத் செய்தார். தன்ஸானியாவில் ஒரு கிராமத்தின் பள்ளிவாசலுடைய இமாம் பைஅத் செய்துள்ளார். நைஜரில் ஒரு மதரஸாவின் முஅல்லிமா பைஅத் செய்துள்ளார்.

### நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்

**தொலைபேசி எண் : 1800 103 2131**

இந்த *TOLL FREE* எண்ணில்

∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

### நபிமொழியிலிருந்து...

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)



Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india

மாநாட்டின்போது காங்கோ பிரஸ்வீலில் 12 நபர்கள் பைஅத் செய்துள்ளார்கள்.

கினிபஸாவின் முபல்லிஃக் எழுதுகிறார்: கினிபஸாவில் சாரே கூச்சா எனும் ஓரிடம் உள்ளது. அங்குள்ள கிராமத்து தலைவர் ஜமாஅத்தின் கடுமையான எதிரியாக இருந்தார். ஆண்டு மாநாட்டின்போது மாநாட்டின் நிகழ்ச்சிகளையும் எனது சொற்பொழிவுகளையும் காண்பதற்கு அவருக்கு அழைப்பு கொடுக்கப்பட்டது. அந்த சொற்பொழிவுகளை கேட்ட பிறகு அவர் கூறினார்:

உங்களுடைய கலீஃபாவும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுனரும் பெருமானார் (ஸல்) அவர்களின் உண்மையான பேரன்பர்கள் ஆவர். அஹ்மதிய்யா ஜமாஅத் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நபியாக ஒப்புக் கொள்வது கிடையாது; அவர்கள் தம்முடைய நபியை உருவாக்கியிருக்கின்றார்கள் என்று எப்பொழுதும் எங்களிடம் கூறப்பட்டு வந்தது. ஆனால், உங்களுடைய இமாமுடைய சொற்பொழிவை கேட்ட பிறகு உங்களுடைய ஜமாஅத் பெருமானார் (ஸல்) அவர்களை உண்மைப்படுத்தக் கூடிய உண்மையான ஜமாஅத் என்று எனக்கு நம்பிக்கை ஏற்பட்டு விட்டது.

அவர் அப்போதே தம்முடன் இருந்த 85 நபர்களுடன் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வதாக அறிவிப்பு செய்தார்.எவர் எதிரியாக இருந்தாரோ அவர் மாநாட்டை கண்ட பிறகு ஜமாஅத்தில் இணைந்து விட்டார்.

அல்லாஹ் பாகிஸ்தானிய மவ்லவிகளுக்கும் புத்தி வரச் செய்வானாக!

தன்ஸானியாவில் அபுஜாக்கே எனும் ஒரு கிராமத்தின் பள்ளிவாசல் இமாம் கூறுகிறார்: நான் MTAவில் ஆண்டு மாநாட்டின் காட்சிகளை கண்டு வியப்படைந்து விட்டேன். அந்த காட்சிகள் மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தின. பைஅத் நிகழ்ச்சி மிகவும் உணர்ச்சிகரமானதாக இருந்தது. ஒவ்வொருவரும் இமாமுக்குப் பின்னால் அச்சொற்களை கூறியவாறு துஆ செய்து கொண்டிருந்தார்; அதை கண்டு எனக்கு வியப்பு ஏற்பட்டது. அந்த காட்சிகள் என்னை முழுமையான முறையில் மாற்றிவிட்டன ; என்னிடத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தி விட்டது. இன்ஷா அல்லாஹ். நான் வாழ்நாள் முழுவதும் இந்த ஜமாஅத்தின் அங்கமாக இருப்பேன். நான் சுன்னத் ஜமாஅத் பள்ளிவாசல் ஒன்றில் இமாமாக இருந்தேன். ஆனால் இப்பொழுது உள்ளத்தால் அஹ்மதியாக உள்ளேன். நான் முழுமையாக மாறிவிட்டேன்.

யூ.கே உடைய தப்லீஃக் துறையின் அறிக்கை என்னவென்றால், மாநாட்டின் போது யூ.கே வை சார்ந்த 22 நபர்களுக்கு பைஅத் செய்யும் நல்வாய்ப்பு கிடைத்தது. அவர்களில் இரண்டு பேர் ஆங்கிலேயர்கள் ஆவர். இரண்டு பேர் நைஜீரியன் ஆவர். 11 பேர் பாகிஸ்தானிகள் ஆவர்.ஒருவர் ரோமானியர்கள் ஆவர். ஐந்து பேர் அரேபியர்கள் ஆவர். ஒருவர் பெங்காளி ஆவார். மாநாட்டின்போது அஹ்மதியல்லாத விருந்தினர்கள் ஏறக்குறைய ஓராயிரம் பேர் கலந்து கொண்டார்கள். மாநாட்டின்போது பல்வேறு தப்லீஃக் அமர்வுகளும் நடத்தப்பட்டன. அதில் கேள்வி பதில் சபைகளும் இருந்தன. அதில் பல்வேறு மக்கள் தம் தாக்கங்களையும் கூறினார்கள்.

MTA ஆஃப்ரிக்காவின் கீழ் 14 க்கும் மேற்பட்ட நேஷனல் டிவி சேனல்களில் என்னுடைய சொற்பொழிவுகள் ஒளிபரப்பு செய்யப்பட்டன. உலகளாவிய பைஅத் நிகழ்ச்சியும் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்பட்டது. அதை பல மில்லியன் மக்கள் கண்டனர். ஆஃப்ரிக்காவில் புதிதாக ஒளிபரப்பு செய்யப்பட்ட சேனல்களில் மலாய் நேஷனல் டிவி சேனல், பெனினில் கெனால் பிளஸ் டிவி சேனல், கேம்பியா கானா, உகாண்டா, லைபீரியா, ஸிராலியோனுடைய அரசாங்க சேனல்களும் அடங்கும். ஏறக்குறைய 30 மில்லியனிற்கும் அதிகமான மக்கள் இந்த சேனல்களை பார்க்கின்றார்கள்.

பல்வேறு வகையான 14 டிவி பத்திரிகையாளர்கள் மாநாட்டில் கலந்து கொண்டார்கள். 57 அறிக்கைகள் ஒளிபரப்பு செய்யப்பட்டன. 55 மில்லியன்களை விடவும் அதிகமான மக்கள் வரை அந்த அறிக்கைகள் சென்றடைகின்றன.

செனிகாலில் மாநாட்டை பார்ப்பதற்காக மிஷன் ஹவுஸில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஓர் இமாம் - அவர் காலேஜில் திருக்குர்ஆன், ஹதீஸ் மற்றும் ஃபிக்காஹ் ஆகியவற்றின் பேராசிரியராக இருக்கின்றார். அவர் மாநாடு முடிந்த பிறகு கூறினார்: இன்று நான் என்னை நற்பேறு பெற்றவனாக கருதுகிறேன். ஏனெனில், இன்று இமாம் மஹ்தியின் கலீஃபாவை நேரடியாக பார்த்து அவர்களின் சொற்பொழிவுகளை கேட்கக் கூடிய வாய்ப்பு எனக்கு கிடைத்தது. இதற்கு முன்பு எனக்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தை குறித்து பல சந்தேகங்கள் இருந்தன. அஹ்மதிகள் நவூதுபில்லாஹ் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மகத்துவத்தை குறைக்கக் கூடியவர்கள் என்று நினைத்திருந்தேன். ஆனால், இன்று கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் சொற்பொழிவை கேட்டு எனது அனைத்து சந்தேகங்களும் நீங்கி விட்டன. இன்றைய சொற்பொழிவை கேட்ட பிறகு அஹ்மதிய்யா ஜமாஅத் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவத்தில் குறைவை ஏற்படுத்தக் கூடியது கிடையாது; மாறாக அன்னார் (ஸல்) மீது களங்கமற்ற முறையில் தூய நேசத்தை கொண்டுள்ள ஜமாஅத் ஆகும்; இது பெருமானார் (ஸல்) அவர்களுக்கு கட்டுப்படுவதற்கும், கீழ்படிவதற்கும் முழு உலகிற்கும் போதனை வழங்குகிறது என்று நான் பகிரங்கமாக கூறுகின்றேன்.

ஆன்லைன் கவரேஜ் தொடர்பாக உள்ள அறிக்கை என்னவென்றால், கடந்த வருடம் அதன் எண்ணிக்கை 41 ஆக இருந்தது. இவ்வருடம் 49 வெப்சைட்டுகள் ஆக ஆகியுள்ளன. அதைப் படிக்கக் கூடியவர்களின் எண்ணிக்கை 15 மில்லியன் என்று கூறப்படுகின்றது. பிரின்ட் கவரேஜ் கட்டுரைகளின் எண்ணிக்கை 14 ஆகும். அந்த செய்தித்தாள் வாசகர்களின் எண்ணிக்கை 5 மில்லியன் என்று கூறப்படுகிறது. டிவி மூலமாக 19 செய்திகள் வெளியாகியுள்ளன. பார்க்கக் கூடியவர்களின் எண்ணிக்கை 10 மில்லியன் என்று கூறப்படுகிறது. ரேடியோ ஸ்டேஷன்களில் மொத்தம் 24 செய்திகள் ஒலிபரப்பாகியுள்ளன. அதை கேட்கக் கூடியவர்களின் எண்ணிக்கையும் 10 மில்லியன் ஆகும்.

அல்லாஹ்வின் அருளால் அனுமானத்திற்கேற்ப 46 மில்லியனை விடவும் அதிகமான மக்கள் ஆண்டு மாநாட்டின் செய்திகளை கண்டார்கள்; கேட்டார்கள். அடுத்து வரும் சில நாட்களில மேற்கொண்டு கவரேஜ் கிடைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. மிகப் பெரும் ரேடியோ சேனல்களான லபிஸி, ரேடியோ, ஸ்காட்லேண்ட் பிபிஸி, சவுத் டுடே, மற்றும் டெய்லி எக்ஸ்பிரஸ் போன்ற பல்வேறு சேனல்கள் செய்தியை ஒலிபரப்பின. அதேபோன்று கண்காட்சிகளில் இருந்தும் பல மக்கள் பயனடைந்தார்கள் என்று நான் கூறியிருந்தேன். புகைப்பட கண்காட்சி இருந்தது. வரலாறை கண்டு, பிற கண்காட்சிகளைக் கண்டு மக்கள் பெரும் தாக்கத்திற்கு ஆளானார்கள். இந்த அனைத்து கண்காட்சிகளும் தப்லீஃக்கிற்கான ஒரு வழிமுறையாக ஆகின. அல்லாஹ்வின் அருளால் மாநாடு நம்மவர்களின் தர்பிய்யத் மற்றும் ஆன்மிகம் ஆகியவற்றிற்கு காரணியாக அமைந்த அதே நேரத்தில் மற்றவர்களுக்கும் இஸ்லாத்தின் போதனையை புரிவதற்கும், அவர்களை இறைவனுக்கு அருகில் கொண்டு செல்வதற்கும் வழிமுறையாக ஆனது.

இதற்காக நாம் அல்லாஹ்வின் முன் இன்னும் அதிகமாக குனிந்து அவனுக்கு நன்றி செலுத்துகின்ற அதேவேளையில் நாம் எப்போதும் அல்லாஹ்வின் தூதுச் செய்தியை ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்கு முன்னரை விடவும் அதிக முயற்சி செய்து வருவோம் என்ற உறுதிமொழியில் நிலை பெற்றிருக்க வேண்டும். அல்லாஹ் அதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.

(அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல், ஆகஸ்ட் 22, 2024, பக்கம் 1 - 8 )

தமிழாக்கம்
மவ்லவி
APA . தாரிக் அஹ்மத்

* * * * * * * *

1ம் பக்கத் தொடர்ச்சி.. (தஃப்ஸீரே கபீர்)

அவர்கள் மரணமடைந்தவர்கள் : உயிருள்ளவர்கள் அல்ல. மேலும் எப்போது எழுப்பப்படுவர் என்பதனை(க் கூட) அவர்கள் அறிவதில்லை. (அந்நஹ்ல் : 23, 24) எங்களது தெய்வங்கள் எங்களது உள்ளங்களின் இரகசியங்களை அறிகின்றனர் என்ற இணை வைப்பாளர்களின் இந்த எண்ணத்தை இந்த வசனத்தில் அல்லாஹ் மறுத்திருக்கின்றான். உங்களது இந்த வாதம் முற்றிலும் தவறாகும் என்று இறைவன் கூறுகின்றான். எவன் படைத்தவனோ அவனே தனது படைப்பினங்களின் உள்ளார்ந்த நிலைகளையும், அதன் தேவைகளையும் நன்கு அறிந்தவனாக இருக்க முடியும். ஆனால் நீங்கள் எவர்களை அழைக்கின்றீர்களோ அவர்கள் அனைவருமே படைக்கப்பட்டவர்களாக இருக்கின்றனர். அப்படியிருக்க அவர்களால் உங்களின் நிலைமைகளை எவ்வாறு அறிவர்?. அதுமட்டுமல்ல அவர்கள் மரணித்தவர்கள் ஆவர்; உயிருள்ளவர்கள் அல்ல. அவர்கள் எப்படி உங்களுக்கு உதவி செய்ய முடியும்? தாம் எப்போது எழுப்பப்படுவோம்? என்பது கூட அவர்களுக்கு தெரியாது. ஆக அவர்களின் முடிவோ வேறொருவனின் கையில் உள்ளது. அதுபோன்ற நிலைமைகளில் ஒரு நபர் ஒருவருடைய கல்லறைக்கு சென்று மரணித்தவரிடம் ஒரு விஷயத்திற்காக கூறுகின்றார் என்றால் அவரோ இணை வைத்தல் எனும் குற்றத்தை இழைக்கின்றார்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 6, பக்கம் 44, காதியான் பதிப்பு 2010-ம் வருடம்)

* * * * * * * *

# ஜுமுஆ பேருரை

**பிரிட்டன் ஆண்டு மாநாட்டின் சந்தர்ப்பத்தின்போது விருந்தினர்கள் மற்றும் விருந்து உபசரிப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட மகத்தான அறிவுரைகள் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டலின் ஒளியில் ஸலாத்தை பரப்புவதற்கான அறிவுரை**

அல்லாஹ்வின் அருளால் ஆயிரக்கணக்கான மக்கள் இங்கு மார்க்க மற்றும் ஆன்மிக சூழலில் இருந்து பயன்பெறுவதற்காக வந்துள்ளனர். இந்த நாட்களில் இங்கு ஹதீக்கத்துல் மஹ்தியில் ஒரு தற்காலிக நகரம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த சூழலில் தங்கி நாம் உலக கேளிக்கைகளிலிருந்து விலகி இருந்து நமது மார்க்க, ஆன்மிகம் மற்றும் நல்லொழுக்க நிலைகளை மேம்படுத்திக் கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்பதற்காக இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

அவர்களிடம் என்ன டியூட்டிகள் கொடுக்கப்பட்டிருந்தாலும் அவர்கள் அவற்றை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். மிகச் சிறந்த முறையில் அதனை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்யுங்கள். ஜல்ஸாவின் விருந்தினர்களை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தாளிகளாக கருதுங்கள்.விருந்தினர்கள் புறமிருந்து உங்களின் பார்வையில் ஏதாவது அநீதியிழைக்கப்பட்டாலும் கூட பின்னர் நீங்கள் அதனை பொருட்படுத்தாதீர்கள்

சில விஷயங்களை விருந்தினர்களுக்கும் நான் கூற விரும்புகின்றேன்.
நீங்கள் ஒரு நல்ல நோக்கத்திற்காக இங்கு வந்துள்ளீர்கள். மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்களாக இங்கு வந்துள்ளீர்கள். உலகியல் பெருமை மற்றும் உலகியல் சேவைகளுக்கு எதிரில் ஒரு உண்மையான நம்பிக்கையாளரின் தனித்துவமாக இருக்கக் கூடிய அந்த உயர் நல்லொழுக்கத்தில் மேலும் முன்னேற்றம் காண்பதை உங்களது கருத்தில் கொள்ளுங்கள்

நீங்கள் உங்களை ஒருபோதும் உலகியல் பயணிகள் மற்றும் விருந்தினர்களின் வட்டத்தில் கொண்டு வருவதற்கு முயற்சி செய்யாதீர்கள். இந்த விஷயத்தை நீங்கள் புரிந்து கொண்டால் பின்னர் விருந்தாளிகளின் பலவீனங்களையும், குறைகளையும், நீங்கள் பொருட்படுத்தமாட்டீர்கள்


---

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 26 ஜுலை 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1403 ஆண்டு **வஃபா** மாதம் **26 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

அல்லாஹ்வின் அருளினால் இன்று பிரிட்டன் ஆண்டு மாநாடு ஆரம்பமாகிக் கொண்டிருக்கின்றது. மேலும் அல்லாஹ்வின் அருளால் ஆயிரக்கணக்கான மக்கள் இங்கு மார்க்க மற்றும் ஆன்மிக சூழலில் இருந்து பயன்பெறுவதற்காக வந்துள்ளனர். இந்த நாட்களில் இங்கு ஹதீக்கத்துல் மஹ்தியில் ஒரு தற்காலிக நகரம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த சூழலில் தங்கி நாம் உலக கேளிக்கைகளிலிருந்து விலகி இருந்து நமது மார்க்க, ஆன்மிகம் மற்றும் நல்லொழுக்க நிலைகளை மேம்படுத்திக் கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்பதற்காக இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆக, இதுபோன்ற நிலைமைகளில் வரக்கூடியவர்களுக்கு எந்தவொரு வசதியும் கிடைப்பதை விட இந்த விஷயத்தைக் குறித்த கவலை இருக்க வேண்டும்; அதாவது எவ்வாறு நாம் இந்த சூழலில் இருந்து அதிக அதிகமாக பயன்பெற முடியும்? என்ற எண்ணம் இருக்க வேண்டும். ஆனால், எவ்வாறிருப்பினும், மனிதனுடன் மனிதத் தேவைகளும், எதிர்பார்ப்புகளும் இணைந்து இருக்கின்றன. எனவே, வருகின்றவர்களுக்கு தேவைகளை பூர்த்தி செய்வதற்கு எந்த அளவிற்கு இயலுமோ , மேலும் வசதிவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியுமோ ஏற்படுத்திக் கொடுங்கள். அதற்காக பல்வேறு துறைகள் ஆண்டு மாநாட்டின் நாட்களில் நமது அமைப்பில் நிறுவப்படுகின்றன. ஆயிரக்கணக்கான ஊழியர்கள் தன்னார்வலர்களாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்களுக்கு தொண்டு ஆற்றுவதற்கு முன்வருகின்றனர்.

எனவே இந்த அடிப்படையில் முதலிலோ, நான் அனைத்து ஊழியர்களுக்கும் இதன் பக்கம் கவனமூட்டுகின்றேன். அதாவது அவர்களிடம் என்ன டியூட்டிகள் கொடுக்கப்பட்டிருந்தாலும் அவர்கள் அவற்றை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். மிகச் சிறந்த முறையில் அதனை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்யுங்கள். ஜல்ஸாவின் விருந்தினர்களை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தாளிகளாக கருதுங்கள். அல்லாஹ்விற்காக நல்ல நோக்கத்திற்காக வரக் கூடிய விருந்தாளிகளாக கருதி அவர்களுக்கு தொண்டாற்றுங்கள். உயர் நல்லொழுக்கங்களை வெளிப்படுத்துங்கள். விருந்தினர்கள் புறமிருந்து உங்களின் பார்வையில் ஏதாவது அநீதியிழைக்கப்பட்டாலும் கூட நீங்கள் அதனை பொருட்படுத்தாதீர்கள். இதுவே நமது மரபாகும். இதுவே உயர் நல்லொழுக்கம் ஆகும். இதுவே இறைவன் மற்றும் அவனது தூதரின் கட்டளையாகும்.




இதனையே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நம்மிடமிருந்து எதிர்பார்க்கின்றார்கள். தற்போது இந்த விருந்து உபசரிப்பும் உயர் நல்லொழுக்கத்தின் வெளிப்பாடும் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிய்யா ஜமாஅத்தினுடைய ஒரு சிறப்புப் பண்பாக எல்லா நாட்டிலும் ஆகிவிட்டது.

ஜல்ஸாவின் நாட்களில் குறிப்பாக இதன் பக்கம் அதிக கவனம் செலுத்தப்படுகின்றது. எனவே இங்கும் எப்போதும் போன்று எல்லா ஊழியர்களும் இஸ்லாமியப் போதனைகளின் சிறப்பம்சமான அந்த உயர் பண்புகளை வெளிப்படுத்துங்கள். எல்லா ஊழியர்களும் இந்த உணர்வுடன் பணி செய்கின்றனர் என்றும் இனியும் செய்வார்கள் என்றும் நான் அறிகின்றேன். ஊழியர்களுடனான சொற்பொழிவு என்று கூறப்படும் நேற்றைய எனது சுருக்கமான உரையில் இதனையே நான் கூறியிருந்தேன். ஆயினும், நினைவூட்டலாகவும், புதிதாக வரக் கூடிய பலரின் தார்ப்பிய்யத்திற்காகவும் இந்த விஷயங்களை நான் கூறிக் கொண்டிருக்கின்றேன்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறிவந்தார்கள்: விருந்தினர்களின் உள்ளம் கண்ணாடியைப் போன்றதாக இருக்கின்றது. அவர்கள் உணர்வு மிக்கவர்களாக இருக்கின்றனர். அவர்களை கருத்தில் கொள்ள வேண்டும். மிகச் சிறிய விஷயத்தால் லேசான தடுமாற்றத்தால் அது கண்ணாடியைப்

போன்று உடைந்து விடுகின்றது.

(மல்ஃபூஸாத் தொகுதி 5, பக்கம் 406, 1984-ம் ஆண்டு பதிப்பு)

விருந்தினரின் உள்ளம் மிகவும் மெல்லியதாக இருக்கின்றது. பின்னர் அந்த நபருக்கு அந்த விஷயம் தடுமாற்றத்திற்கு காரணியாக ஆகிவிடுகின்றது. இதுவோ ஊழியர்களின் தவறாக இருந்தது என்று சிலர் சரியாக சிந்திப்பதில்லை. ஜமாஅத்தின் போதனை இதற்கு எந்த வகையிலும் பொறுப்பு கிடையாது. ஆயினும், சிலருக்கு எவ்வாறிருப்பினும் தடுமாற்றம் ஏற்பட்டு விடுகின்றது. எனவே மிகவும் கருத்தில் கொள்வதற்காக அவசியம் உள்ளது. எவ்வாறிருப்பினும் இந்த விஷயங்கள் எல்லாம் புதிதாக வரக் கூடியவர்கள் தொடர்பாக கூறப்பட்டவை ஆகும். மேலும் எவர்களுக்கு சரியான தர்பிய்யத் கிடைக்கவில்லையோ அல்லது ஜமாஅத்தில் இன்னும் இணையவில்லையோ அவர்கள் தொடர்புடையவையாகும்.ஆனால், இங்கு வரக்கூடியவர்களில் பெரும்பாலார் அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிகள் ஆவர். அவர்கள் இந்த விஷயத்தை புரிந்து வைத்துள்ளனர். அதாவது இங்கு கஷ்டங்களை சகிக்க நேரிடும்.

ஆனால் எவ்வாறிருப்பினும்,நான் கூறியது போன்று சில விருந்தினர்கள் வெளியில் இருந்தும் வருகின்றனர். அவர்களை கருத்தில் கொள்ள வேண்டும். அவர்கள் இன்னும் ஜமாஅத்தில் இணையாதவர்களாகவோ அல்லது சரியான தர்பிய்யத் கிடைக்காதவர்களாகவோ இருக்கின்றனர். எனவே இதற்காக எல்லா ஊழியர்களும், ஒவ்வொரு துறையைச் சார்ந்த ஊழியர்களும், தத்தமது விருந்தினர்களை நல்ல முறையில் கருத்தில் கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். அந்த ஊழியர்களின் டியூட்டி டிராபிக் துறையில் இருந்தாலும் அல்லது பார்க்கிங்கில் டியூட்டி இருந்தாலும் சரியே அல்லது உணவு பரிமாறுவதில் இருந்தாலும் சரியே அல்லது டிஸிப்பிலின் துறையில் டியூட்டி இருந்தாலும் சரியே அல்லது கேட்டில் செக்கிங் டியூட்டியில் இருந்தாலும் சரியே அல்லது ஹைஜீன் அல்லது தூய்மை துறையில் டியூட்டி இருந்தாலும் சரியே அல்லது தண்ணீர் சப்ளை டியூட்டியில் இருந்தாலும் சரியே. அல்லது வேறு எந்த டியூட்டியாக இருந்தாலும் சரியே. விருந்தினர்களின் வசதிக்கான ஏற்பாடு இருக்க வேண்டும் ; மேலும் அவருக்கு எவ்வகையிலும் துன்பம் நேரிடக் கூடாது என்பதற்காக இயன்ற வரை முயற்சி செய்யுங்கள்.

சில விஷயங்களை இதன் பிறகு விருந்தினர்களுக்கும் நான் கூற விரும்புகின்றேன். அதேபோன்று சில நிர்வாக விஷயங்களும் இருக்கின்றன. அவற்றை நான் எடுத்துரைப்பேன். விருந்தினர்களிடம் நான் எல்லாவற்றையும் விட முதலில் இந்த விஷயத்தை கூறவிரும்புகின்றேன். அதாவது நீங்கள் ஒரு நல்ல நோக்கத்திற்க்காக இங்கு வந்துள்ளீர்கள். மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்களாக இங்கு வந்துள்ளீர்கள். உலகியல் பெருமை மற்றும் உலகியல் சேவைகளுக்கு எதிரில் ஒரு உண்மையான நம்பிக்கையாளரின் தனித்துவமாக இருக்கக் கூடிய அந்த உயர் நல்லொழுக்கத்தில் மேலும் முன்னேற்றம் காண்பதை உங்களது கருத்தில் கொள்ளுங்கள். மேலும் எதனை நீங்கள் பெறுவதற்காக நீங்கள் இங்கு வந்துள்ளீர்களோ மேலும் அந்த நோக்கத்திற்காகவே வரவும் வேண்டும் . நிச்சயமாக ஜமாஅத் அமைப்பின் கீழ் நான் கூறியதுபோன்று அந்த தூய மற்றும் அருளுக்குரிய மற்றும் நோக்கம் நிறைந்த பயணத்தை மேற்கொள்ளக் கூடிய பயணிகளுக்கும் விருந்தினர்களுக்கும் தொண்டாற்றுவதற்காக அமைப்பு இருக்கின்றது. மேலும் தேவைகளைப் பொருத்தவரை என்னென்ன தேவைகளை நிறைவேற்ற முடியுமோ அதனை நிறைவேற்றுவதற்கு நிர்வாகம் முயற்சி செய்கின்றது. ஆனால், எவர் அல்லாஹ்விற்காக பயணத்தை மேற்கொள்ளக் கூடியவர்களாக இருக்கினறாரோ அவருக்கு இந்த உலகியல் தேவைகள் மற்றும் வசதிவாய்ப்புகளின் பக்கம் குறைந்த கவனமே இருக்கும். இங்கு தங்கி அதிக அதிகமான ஆன்மிக பயன்களை அடைய வேண்டும் என்பதே அவர்களின் அடிப்படை நோக்கமாக இருக்கின்றது.

எனவே நீங்கள் உங்களை ஒருபோதும் உலகியல் பயணிகள் மற்றும் விருந்தினர்களின் வட்டத்தில் கொண்டு வருவதற்கு முயற்சி செய்யாதீர்கள். இந்த விஷயத்தை நீங்கள் புரிந்து கொண்டால் பின்னர் விருந்தாளிகளின் பலவீனங்களையும், குறைகளையும், நீங்கள் பொருட்படுத்தமாட்டீர்கள். ஏனெனில், இன்ன ஊர் மக்களுக்கு சிறந்த ஏற்பாடு இருந்தது ; இன்ன ஊர் மக்களுக்கு அதிக வசதிவாய்ப்புகள் செய்யப்பட்டிருந்தன ; இன்ன நபருடன் சிறந்த முறையில் நடந்து கொள்ளப்பட்டது ; இன்ன நபருடன் சரியாக நடக்கவில்லை என்று சிலமுறை முறையீடுகள் உருவாகிவிடுவதை காணமுடிகின்றது.

சிலமுறை தவறான அனுமானத்தினால் கூட சில பலவீனங்கள் நிகழ்ந்து விடுகின்றன. எனவே அவற்றை புறந்தள்ள வேண்டும். ஒவ்வொருவரின் உள்ளத்திலும் இந்த எண்ணம் இருந்தால், வரக்கூடிய ஒவ்வொரு அஹ்மதி முஸ்லிமின் உள்ளத்திலும் நமது நோக்கம் ஆன்மிக பயன் பெறுவது மட்டுமே தவிர எவ்வகையான உலகியல் வசதிவாய்ப்புகளை பெறுவது அல்ல என்ற எண்ணம் இருந்தால் பின்னர் விருந்து உபசரிப்பவர் மற்றும், விருந்தாளி இருவரும் அன்பு மற்றும் நேசத்துடன் நாளை கழிப்பார்கள். எவ்வாறிருப்பினும், இதனையும் கூறிவிடுகின்றேன். அதாவது நிர்வாகத்தின் புறமிருந்து முழு முயற்சி செய்யப்படுகின்றது. அதாவது எல்லா விருந்தினர்களுடனும் ஒன்றுபோல் நடந்து கொள்ள வேண்டும் என்றே முயற்சி செய்யப்படுகின்றது. ஆனால் அதன் பின்னரும் சிலமுறை நான் கூறியது போன்று சிலகூடுதல் குறைவுகள் ஏற்பட்டு விடுகின்றன. மேலும் அதனை விருந்தினர்கள் பொருட்படுத்தக் கூடாது. இதுவே நமது போதனையாகும். விருந்தினர்களுக்கு கண்ணியம் அளியுங்கள்; மேலும் கருத்தில் கொள்ளுங்கள் என்று எங்கு நமக்கு இந்த கட்டளை இருக்கின்றதோ அங்கு நினைவிற் கொள்ளுங்கள். விருந்தினர்களுக்கும் இந்த விஷயம் கூறப்பட்டுள்ளது. அதாவது, நீங்களும் விருந்து உபசரிப்பவர்களின் ஓய்வை கருத்தில் கொள்ளுங்கள். எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் விருந்தினர்களுக்கு மிகவும் கண்ணியமும், மரியாதையும் செலுத்தி வந்தார்கள். உங்களது தேவைகளை தயக்கமின்றி கூறிவாருங்கள் என்றும் அன்னார் (அலை) கூறிவந்தார்கள். (மல்ஃபூஸாத், தொகுதி 3, பக்கம் 112, 1984-ம் ஆண்டு காதியான் பதிப்பு)

ஆனால், இது பொதுவான சூழலில் கூறப்பட்ட விஷயமாகும். ஜல்ஸாவிற்கு வருகை தரக் கூடிய விருந்தினர்கள் தொடர்பாக அன்னார் (அலை) கூறி வந்தது என்னவென்றால் அவர்களுக்கு ஒரே ஏற்பாடு இருக்க வேண்டும். ஒவ்வொரு விருந்தினருக்கும் ஒரே அமைப்பின் கீழ் இருக்கின்ற விருந்து உபசரிப்பு செய்யப்பட வேண்டும். இயன்ற வரை ஒன்றுபோல் இருக்க வேண்டும். ( ஹஸ்ரத் யஃகூப் அலி இர்ஃபானீ ஸாஹிப் (ரலி) அவர்களின் நூல் ஸீரத் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பாகம் 2, பக்கம் 395 - 396)

ஜல்ஸாவின் நாட்களில் விருந்து உபசரிப்பிற்கான ஏற்பாடு சாதாரண நாட்களிலிருந்து வேறுபட்டதாக இருக்கின்றது. இங்கு வந்துள்ள ஆயிரக்கணக்கான மக்களுக்கு எந்த அளவுக்கு இயலுமோ ஒன்றுபோல் வசதிவாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுப்பதற்கு முயற்சி செய்யப்படுகின்றது. அஹ்மதி அல்லாத விருந்தினர்கள் வருகின்றனர் அல்லது வெளிநாடுகளில் இருந்து வருகின்ற விருந்தினர்கள் இருக்கின்றனர். அவர்களுக்கு சில நிர்பந்தத்தின் காரணமாக வேறுபல ஏற்பாடுகள் செய்ய நேரிடுகின்றன.

எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் விருந்தினர்களுக்கு வழங்கி வந்த இந்த கண்ணியம் மற்றும் மரியாதைக்கு மத்தியிலும் சாதாரண நாட்களில் விருந்தினர்களின் உள்ளத்தில் இந்த விஷயத்தை இடம் பெறச் செய்து வந்தார்கள். அதாவது நீங்கள் இங்கு வருவதற்கான அசல் நோக்கம் மார்க்கத்தை கற்பதாக இருக்க வேண்டும். மேலும் உங்களது உள்ளத்தையும், எண்ணத்தையும் தூய்மைப்படுத்த வேண்டும் என்பதாக இருக்க வேண்டும்; மேலும் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்கான படித்தரங்களை கடப்பதாக இருக்க வேண்டும். எனவே இந்த நோக்கத்தைப் பெறுவதற்காகவே ஒவ்வோர் ஆண்டும் இங்கு மக்கள் விருந்தினர்களாக வருகின்றனர். மேலும் ஒன்றுகூடுகின்றனர். மேலும் இந்த நோக்கத்தை அடைவதற்காகவே ஜல்ஸாவிற்கு வருகை தரக்கூடிய விருந்தினர்கள் வருகை தரவேண்டும். இந்த நாட்களில் ஜல்ஸாவில்

Proprietor off : 044- 2260 1886
**RAZIK XEROX & TELECOM**
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

- PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
- LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
- SCANNING, RECHARGE, COLOUR XEROX,
- ALL VEHICLE INSURANCE, COURIER

NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 9 Thursday 05 SEPTEMBER 2024 Issue No.36

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

அமர்ந்து ஜல்ஸா திடலில் நடைபெறக் கூடிய நிகழ்ச்சிகளையும் சொற்பொழிவுகளையும் கவனமாக கேட்க வேண்டும். மேலும் அவற்றிலிருந்து பயனடைவதற்கு முயற்சி செய்யுங்கள்.

இன்னும் சில பொதுவான விஷயங்களையும் நான் விருந்தினர்களிடம் கூற விரும்புகின்றேன். நம்பிக்கையாளர் தனது நேரத்தை சரியாக பயன்படுத்துவது அவருக்கு மிகவும் அவசியமாகும். இதுபோன்ற ஒன்றுகூடலின் சந்தர்ப்பத்தின்போது அனைவரும் ஒன்றுகூடும்போது, வெகுதொலைவிலிருந்து வந்திருக்கின்ற அன்பர்கள் மற்றும் அறிந்தவர்களை ஒருவர் மற்றவரை சந்திப்பதற்கும்,ஒன்றுகூடி அமர்வதற்கும் ஆசை இருக்கும். தற்போது ஒரு நாட்டைச் சார்ந்தவர்கள் மட்டும் அறிந்தவர்களாகவும், அன்பர்களாகவும் இருப்பதில்லை. மாறாக பல்வேறு நாடுகளில் வசிக்கக் கூடிய அறிந்தவர்களையும், அன்பர்களையும் சந்திப்பதற்கான ஏற்பாட்டை அல்லாஹ் செய்திருக்கின்றான். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அல்லாஹ் எப்படிப்பட்ட ஜமாஅத்தை வழங்கியுள்ளான் என்றால், அந்த ஜமாஅத் தேசங்கள் மற்றும் சமுதாயங்களின் எல்லைகள் மற்றும் வித்தியாசங்களை அகற்றி விட்டது. மேலும் ஒரு மகத்தான சகோதரத்துவத்திற்கான அடித்தளம் அமைக்கப்பட்டு விட்டது.

அன்னார் (அலை) ஜல்ஸாவில் கலந்து கொள்ளக்கூடியவர்களுடைய ஒரு நோக்கமாக இதனையும் கூறியுள்ளார்கள்: அதாவது ஜமாஅத்தின் தொடர்புகளும், சகோதரத்துவமும் உறுதியடைய வேண்டும். (ஷஹாதத்துல் குர்ஆன், ரூஹானீ கஸாயீன், தொகுதி 6, பக்கம் 394)

அவர்களுக்கிடையிலான தொடர்பு வலுவடைந்து விட வேண்டும்.நாம் ஒரே சமுதாயமாக ஆகிவிட வேண்டும். மேலும் அதற்காக ஒன்றாக இணைந்து அமர்வதும் அவசியமாகும் என்பது வெளிப்படையாகும். உங்களுக்குள் ஒருவர் மற்றவருடன் பரஸ்பர சந்திப்புகளும் நிகழ்கின்றன. மேலும் இது மிக அவசியமான விஷயமாகும். ஒருவர் மற்றவருடன் தொடர்புகளை அதிகரித்துக் கொள்வது அவசியமான விஷயமாகும். ஆனால், எப்படியிருப்பினும் நாள் முழுவதும் நிகழுகின்ற ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளை கேட்பதிலும் நேரத்தை கழிக்க வேண்டும்.மேலும் அதன் பிறகு கிடைக்கின்ற நேரத்தில் பின்னர் உங்களுக்குள் பரஸ்பரம் ஒன்றாக அமருங்கள் ; பேசுங்கள். மேலும் தொடர்புகளை அதிகரித்துக் கொள்ளுங்கள்.

இந்த விஷயமும் காண நேரிட்டுள்ளது. அதாவது சிலமுறை சில நீண்டநாள் அறிமுகமானவர்களுடைய சந்திப்புகள் எந்த அளவிற்கு நீண்டு விடுகின்றன என்றால் அதாவது நீண்ட காலம் கழித்து சந்திக்கக்கூடியவர்களின் சந்திப்புகள் எந்த அளவிற்கு நீண்டு விடுகின்றன என்றால், மகிழ்ச்சியான உரையாடல்களில் முழு இரவுமே வீணாகி விடுகின்றது. மேலும் பின்னர் தஹஜ்ஜுத் என்பது ஒருபக்கம் இருக்கட்டும்; ஃபஜர் தொழுகைக்கான நேரத்தில் கூட மிக அரிதாகவே அவர்களுக்கு விழிப்பு வருகின்றது.

அடுத்து இவ்வாறும் நிகழ்கின்றது. அதாவது உணவு உண்ணும் கூடாரத்திலும் பேச்சுகளில் ஈடுபடுகின்றனர்; மேலும் உணவு உண்ணும்போது மக்கள் நீண்ட உரையாடல்களில் மும்முரமாகி விடுகின்றனர். இதனால் சிலமுறை நிர்வாகத்தினருக்கும் சிக்கல்கள் ஏற்படுகின்றன. எந்த அளவு நேரத்தை அங்கு கழிக்கின்றனர் என்றால் தொழுகைக்கான நேரம் ஆகிவிட்டது அல்லது மிக அதிக நேரம் ஆகிவிட்டது என்றோ அவர்களுக்கு நினைவூட்ட வேண்டிய அவசியம் ஊழியர்களுக்கு ஏற்படுகின்றது. எவ்வாறிருப்பினும், அதேபோன்று வீடுகளில் தங்க வைப்பவர்களுக்கும் இதுபோன்ற சிக்கல்கள் ஏற்படக் கூடும். எனவே நடுநிலையான பாங்குடன் செயல்பட வேண்டும். விருந்து உபசரிப்பவர்களும் தங்களது பணியை நிறைவு செய்து பின்னர் அடுத்த வேளைக்கான ஏற்பாட்டை செய்ய வேண்டும் என்ற இந்த விஷயத்தை விருந்தினர்களும் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வருகை தந்த விருந்தினர்கள் தொடர்பாக அல்லாஹ்வின் கட்டளை இவ்வாறாகவே இருந்தது. அதாவது அமர்ந்து கொண்டு உரையாடலில் நேரத்தை வீணடிக்காதீர்கள்; உண்ணலும், பருகலும் முடிந்து விட்டால் பின்னர் எழுந்து சென்று விடுங்கள். (அல் அஹ்ஸாப்: 54)

எனவே குறிப்பாக உணவு கூடாரத்தில் அதிக கூட்டம் இருக்கும்போது சிலமுறை ஷிஃப்ட் முறையில் உணவு பரிமாற நேரிடுகின்றது. எனவே உணவு உண்டு விட்டு உடனடியாக எழுந்து விடவேண்டும். அப்போதுதான் மற்ற மக்களும் வரமுடியும். மேலும் எளிதாக உணவு உண்ண முடியும். எனவே இந்த விஷயங்கள் மேற்கொள்ளப்பட்டால் பின்னர் எவ்வகையான முறையீடுகளும் உருவாகாது. மேலும் இந்த மகிழ்ச்சிகரமான சூழலில் அனைத்து பணிகளும் நடைபெற்று கொண்டிருக்கும்.

அடுத்து, இதேபோன்று பெரும் எண்ணிக்கையில் மக்கள் ஒன்றுகூடும்போது சிலமுறை சில கசப்பான சம்பவங்களும் நிகழ்ந்து விடுகின்றன. சிலமுறை அமைப்பின் மீதான புகாரின் காரணமாக விருந்தினர் ஓர் ஊழியரை ஏசிபேசி விடக் கூடும்; ஊழியரும் அவருக்கு பதில் கொடுத்து விட்டால் பின்னர் பிரச்சனை மேலும் அதிகரித்துவிடுகின்றது. மேலும் இவ்வாறு பகைமைகளுக்கான ஒரு தொடர் ஆரம்பமாகிவிடுகின்றது. அது மிக மிக அரிதான ஒரு சில சம்பவமாகவே இருந்தாலும் கூட அதனால் சூழல் பதற்றமாகி விடுகின்றது. மற்ற மக்களும் கூட தாக்கத்திற்குள்ளாகி விடுகின்றனர். புகார் கூறக் கூடியவர் அல்லது தவறான விஷயத்தை கூறக் கூடியவர் இங்கு வசிக்கக் கூடியவராக இருந்தால் அதாவது யூ.கே வைச் சேர்ந்தவராக இருந்தால் பின்னர் இந்த தொடர் இன்னும் நீண்டு விடுகின்றது. மேலும் வேறு சந்தர்ப்பங்களிலும் அது வெளிப்படுத்தப்படுகின்றது. இங்கு மட்டும் அல்ல ; மற்ற நாடுகளிலும் இதே விஷயம் காணக் கிடைக்கின்றது.

உண்மையான நம்பிக்கையாளரைக் குறித்து அல்லாஹ் கூறுகின்றான்: அவர்கள் கோபத்தை அடக்கக் கூடியவர்களாக இருக்கின்றனர். மேலும் அநீதியிழைக்கக் கூடியவர் அல்லது எவர் மீது அநீதியிழைக்கப்படுகின்றதோ அவர்கள் இருவருக்கும் நான் கூறுகின்றேன். ஜல்ஸாவின் சூழலின் புனிதத்துவத்தை கருத்தில் கொள்ளுங்கள்; மேலும் விருந்தினர்களும் கண்டும் காணாமல் இருங்கள்; மேலும் மன்னித்தலை கைகொள்ளுங்கள்.

ஒருவேளை அவர்களின் பார்வையில் அநீதி இழைக்கப்பட்டிருந்தாலும் கூட பொறுமை மற்றும் சகிப்புத்தன்மையுடன் செயல்படுங்கள். பொறுமை மற்றும் தைரியத்தை வெளிப்படுத்துங்கள். மேலும் விருந்தினர்கள் புறமிருந்து அநீதி இழைக்கப்பட்டிருந்த போதிலும் அதாவது விருந்தினர்கள்தான் அநீதி இழைக்கின்றனர் என்று அவர்கள் கருதுகின்றனர் என்றாலும் கூட ஊழியர்கள் தங்களது கோபத்தை கட்டுப்படுத்துங்கள்; மேலும் கோபத்தை விழுங்கி விடுங்கள்.

**(இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்.....)**

தமிழாக்கம்
மவ்லவி A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * *

**National Watch Company**

**Sales & Service**



**B. Mohamed Adil**
93632 06679
99433 38000

**196, Trichy Road, Sulur - 641 402.**
**Somanur, Anuparpalayam, Karumathampatti.**

O.A. NIJAM
99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT
99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

**5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,**
**{ opp. Karuna Clinic } Tirunelveli-627005**

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad